நூலகம்

விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 29 திங்கட்கிழமை (14.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

# தமிழ் இளைஞர்கள் கடத்தல்
# சாட்சியத்தின் மூலம் உண்மைகள் நிரூபணம்!

- ஐவரையும் கடத்தியது கடற்படையினர்
- திருமலை சித்திரவதை முகாமில் தடுப்பு
- விடுவிக்க தலா ஒரு கோடி கப்பம்

23ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்புலவு காணி; நாளைய தினம் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் பொதுமக்களின் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு தமது அமைச்சு மூலமாக 148 மில்லியன் 23☛

## உமா ஓயா திட்டம் புதிய அறிக்கை

(கொழும்பு)

உமா ஓயா திட்டம் குறித்து புதிய அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு மூவர் கொண்ட அமைச்சரவை குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய 23☛

## பிறந்த சிசுவை புதைத்த சம்பவம்
### இரு பெண்கள் கைது

(கொழும்பு)

லிந்துலை மட்டுக்கலை 7ஆம் இலக்க கொலனியில் பிறந்த சிசுவை புதைத்த சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்கள் கைது 23☛

## நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் வெளியிடும் நல்லைக்குமரன் "வெள்ளி விழா மலர்" வெளியீட்டு விழா நாளை காலை செவ்வாய்க் கிழமை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் டாக்டர் ப.சத்தியமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இந்த ஆண்டு 23☛

## வேறு அரசாங்கம் தேவையில்லை!

(கொழும்பு)

அரசாங்கத்தில் சில தவறுகள் இருந்தாலும் வேறு அரசாங்கம் ஒன்றை தற்போது ஏற்படுத்தும் தேவையில்லை என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தில் சிறிய தவறுகள் ஏற்படு 24☛

## ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட
## நல்லாட்சியை பாதுகாக்கவே நான் பதவி விலகினேன் - ரவி

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட நல்லாட்சி அரசாங்கத்தை பாதுகாக்கவே அமைச்சு பதவியை தாம் இராஜினாமா செய்ததாக மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி தாமாகவே பதவி விலகியுள்ள முன்னாள் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார். 23☛



## புதிய வெளிவிவகார அமைச்சராக திலக்!



(கொழும்பு)

புதிய வெளிவிவகார அமைச்சர் நாளை நியமிக்கப்படுவார் எனவும் புதிய வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்படுவதற்கான சாத்தியம் அதி 24☛

## மகிந்தவுடன் இணையும் சம்பந்தன்!
### நாமல் எம்.பி வரவேற்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நானும் இணைந்து ஆட்சி புரிய வேண்டும் என்று விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கு மகிந்தவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வரவேற்பளித்துள்ளதுடன்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் இந்த நிலைப்பாட்டை வரவேற்கிறேன் எனவும் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண மகிந்த ராஜபக்ஷ அன்றும் தயாராக இருந்தார். இன்றும் தயாராக இருக்கிறார் எனவும் நாமல் பதிவிட்டுள்ளார்.

மேல்மாகாண கலாசார சதுக்கத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் 24☛



## மீன் வாடிக்குள் அகழ்வுப் பணி!

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேசாலை 4ஆம் வட்டார கடற்கரை பகுதியில் உள்ள மீனவர் ஒருவரின் வாடி ஒன்றினுள், மன்னார் நீதவான் ஏ.ஜீ. 24☛

## 24 மணி நேர முறைப்பாட்டு சேவை

(கொழும்பு)

போதைப் பொருள் பாவனை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் தொடர்பான முறைப்பாடுகளை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குத் தெரியப்படுத்துவதற்காக 24 மணிநேர 24☛

## ஜனாதிபதியிடம் வாருங்கள்!
### விஜயதாசவை அழைக்கிறார் - டிலான்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சி விரட்டுமாயின் கூட்டு எதிர்க்கட்சியினரிடம் ஏமாறாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வருமாறு நீதி அமைச்சர். விஜயதாச ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுப்பதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹாலி - எல குடுமஹவெல பிரதேசத்தில் நேற்று நடை 24☛



## ஆளும் கட்சிக்குள் 'அடிதடி'
### கூட்டு எதிர்க்கட்சி கிண்டல்

(கொழும்பு)

நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும் அரசாங்கத்தின் ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அடிதடி சர்வதேச அளவில் கேலிக்குரியதாகிப் போயுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி கிண்டலாக குறிப்பிட்டுள்ளது

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை குறித்து கருத்து வெளியிடும்போதே கூட்டு எதிர்க் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் சொய்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்.

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு எதிராக அவர் சார்ந்த ஆளுங்கட்சியே நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரவுள்ளது. 23☛

## மின்சார ரயில் விரைவில்!

(கொழும்பு)

நாட்டில் மின்சார புகையிரத சேவையினை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர தெரிவி 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுபான்மையினருக்கு உரிமை மறுப்பு; குற்றவாளிகளுக்கு பதவி, கௌரவம்

## சிறீநேசன் எம்.பி விசனம்

(கொழும்பு)

ஓர் இனத்தவர்கள் மாத்திரம் அளவுக்கு அதி கமான உரிமைகளையும், சுதந்திரத்தினையும் அனுபவித்துக் கொண்டு ஏனைய சிறுபான்மை இனத்தவர்களை இரண்டாம் தர பிரஜைகளாக கணிக்கும் போக்கு நாட்டில் தற்போதும் காணப்படுகின்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை-வீரமுனையில் 232 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தின் 27வருட ஆண்டை நினைவு கூர்ந்து நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வீரமுனை சிந்தா யாத்திரை பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டை பொறுத்த மட்டில் படுகொலைகளுக்கு மாத்திரம் பஞ்சமில்லை. கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, மயிலந்தனை, நாகர் கோவில் பாடசாலை படுகொலை, குமுதினி படகு படுகொலை, திராய்க்கேணி, உடும்பன்குளம், நிந்தவூர், வீரமுனை, நாவிதன்வெளி படுகொலை என பட்டியல் நீண்டு செல்கின்றது.

இந்த நாட்டில் அராஜகமான, காடைத் தனமான ஆட்சி நடைபெற்றதற்குரிய அடையாளங்களாக இவ்வாறான படுகொலைகளை சுட்டிக்காட்ட முடியும்.

232 மக்கள் அன்று இந்த ஆலயத்திலே அநீதியான, அராஜகமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இங்கிருக்கின்ற பொறுப்புள்ள அரசாங்கம் குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களுக்கான தண்டனைகளை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் குற்றம் இழைத்த குற்றவாளிகளுக்கு பதவி உயர்வுகளை பெற்றுக்கொடுத்ததோடு அவர்களை கௌரவித்து மரியாதைக்குரியவர்களாக மதிக்கும் கேவலமான செயற்பாட்டினையே செய்து வருகின்றது.

இன்றைய நல்லாட்சியானது எமது மக்கள் பன்னெடும் காலமாக பட்ட துன்பதுயரங்களை பார்க்க வேண்டிய தேவையுள்ளது. பட்டப்பகலில் ஆலயத்தில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த அனைத்து மக்கள் கண்கள் முன்னாலும் கொடூரர்களின் கோரத் தாண்டவம் நிகழ்ந்திருக்கின்றது.

அதற்கான சான்றுகளாக இன்றும் அந்த இடத்தில் உயிர் தப்பி வாழ்பவர்கள் வாழ்கின்றார்கள். ஆனால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் சுற்றித் திரிகின்றார்கள்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் பல்வேறுபட்ட படுகொலைகள் நடைபெற்றிருந்தாலும் எந்த ஒரு படுகொலையிலும் கொலையாளிகள் சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்படவில்லை என்பது அனைவருக்கும் மனவேதனை தரும் விடயமாகும் என சிறீநேசன் எம்.பி சுட்டிக்காட்டினார். (செ)

# கொழும்பில் நாளை பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரச நிர்வாக சேவையாளர்களுக்கு சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத் தருவதாக கூறிய அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது. எனவே நாளை 15ஆம் திகதியன்று அரச நிர்வாக அமைச்சின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுப்போம் என தெரிவித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் சந்தன சூரியாராச்சி தீர்வு கிட்டாவிடின் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை அறிவிப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மருதானை சன சமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ)

# தேசிய மட்ட தமிழ் தினப்போட்டி; வவுனியா செட்டிகுளத்தில்

## இரு மாணவர்களுக்கு தங்கப் பதக்கம்



(குருமன்காடு)

தேசிய மட்ட தமிழ் தினப் போட்டியில் வவுனியா செட்டிகுளம் கோட்டத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி செவ்வாய் கிழமை கொழும்பு சேனநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றிய செட்டிகுளம் மாணவர்கள் இருவரும் சாதனை படைத்துள்ளனர்.

இதன்படி, வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி ம.ஆர்த்தனா பிரிவு-5 இல் கவிதை ஆக்கத்தில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், வவுனியா மாணிக்கவாசகர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் அ.அனுசாந்த் பிரிவு - 4இல் கவிதை ஆக்கத்தில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினையும் பெற்று தக்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம் கோட்டத்தில் தேசிய ரீதியில் தனி ஆக்கத்தில் குறித்த பிரி வில் தங்கப்பதக்கம் பெறப்பட்டமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.(செ-250)

# ராஜிதவுக்கு எதிராக முறையிட முடிவு



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் சுகாதார அமைச்சர் ஏமாற்றியுள்ளதாக அந்த சங்கம் கூறியுள்ளது.

குறித்த வைத்தியசாலை அரசுடமையாக்கப்படவில்லை என தாம் மேற்கொண்ட தேடுதலில் தெரியவந்துள்ளதாகவும் இவ்வாறான நிலையில், அந்த வைத்தியசாலைக்கு அரசாங்கம் நிதியை ஒதுக்குவது பொது நிதியை தவறாக பயன்படுத்துவதாகும் எனவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறி யுள்ளது.

இதனை காரணமாக கொண்டு அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (செ)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் இராசையா



கோண்டாவில் வாகீஸ்வரியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு, சோளன்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராசையா அவர்கள் 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-சொர்ணம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அன்னம்மா, நவமணி மற்றும் கனகம்மா, நவரட்ணம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யசோதா, சுகந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன், வரன் ஆகியோரின் மாமனாரும், ஹரிகாலன், பிரதீபன், ஹரிசங்கர், ஹரிராஜ், குருப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.08.2017) காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
சோளன்தோட்டம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(125)

# போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பதில் சிரமம்-சாகல

(கொழும்பு)

இலங்கையின் அமைவிடம் காரணமாக நாட்டின் ஊடாக நடக்கும் போதைப்பொருள் கடத்தல்களை ஒழிக்கும் நடவடிக்கை சிரமமானதாக மாறியுள்ளதாக தெரிவித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க,

இதன் காரணமாக சர்வதேச உதவிகளை பெற்று போதைப்பொருள் கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்கு செய்த, போதைப்பொருள் எதிர்ப்பு நடைப் பயணத்தில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே பிரேசில் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீனி கொள்கலன்களை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்த இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன கூறியுள்ளார். (செ)

# 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது கனவு-பீரிஸ்

(கொழும்பு)

மைத்திரி-ரணில் தேசிய அரசாங்கத்தால் 2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்ட அங்கீகாரத்திற்காக சிறிய பெரும்பான்மையை கூட அரசாங்கத்தால் பெற முடியாது என அக்கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

தற்போது அரசாங்கத்திற்கு உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை விரைவில் இல்லாது போகும் எனக் குறிப்பிட்ட ஜீ.எல். பீரிஸ், 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் கனவு மாத்திரமே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடாளுமன்றத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, மக்களுக்கும் நாட்டிற்கும் நட்பான பொதுமக்கள் விரும்பும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவோம் எனவும் ஜீ.எல்.பீரிஸ் சூளுரைத்துள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களிலிருந்து விடுபட மகிந்த கூறும் பரிகாரம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாவங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

டி.பி. தென்னகோன் நினைவாக தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாடு பெரும் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. அநுராதபுரம் மக்கள் தாமரைக் கிழங்குகளை உண்டு வாழும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது. நாட்டை இந்த நிலைமைக்கு மாற்றிய பாவத்திலிருந்து மீள்வதற்கு சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

ஆரம்பத்தில் என்னை திருடன் எனச் சொன்னார்கள். இன்று அவர்களுக்குள்ளேயே மாறி மாறி திருடர்கள் எனச் சொல்லிக் கொள்கிறார்கள். அப்படிப் பார்க்கும் போது அவர்கள் அனைவரும் திருடர்கள் தான் என மகிந்த தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவின் கொள்கையே சு.க.தலைவரின் கொள்கை

### மகிந்த கடும் விசனம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை நடைமுறைப் படுத்தும் முன்னணி குழுவாக ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கை பொதுஜன முன்னணியின் கண்டி மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதோ, தனியார்மயப்படுத்துவதோ இல்லையெனவும், ஐ.தே.கவின் கொள்கையே அதுவாகும் எனவும் இதனால், தமது கட்சியின் கொள்கையுடன் நேரடியாக முரண்படும் ஒரு கட்சியுடன் தொடர்ந்தும் ஆட்சியில் ஒட்டியிருக்க முடியாது என தற்போதைய ஸ்ரீல.சு.கவின் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஊடகங்களிடம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த அணியினரின் குதூகலம் குறுகிய ஆயுளைக் கொண்டது

### ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை



(கொழும்பு)

ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் விடயத்தில் மகிந்த அணியினர் குதூகலம் அடைந்தாலும் அது குறுகிய ஆயுளைக் கொண்ட குதூகலம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்த விடயத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

மகிந்த ஆட்சியில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் மேற்கொண்ட ஊழல் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இந்த நிலையில் அடுத்த வாரத்தில் அவர்களுக்கு என்ன நிகழும் என்று பாருங்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைக்கு சுனாமி ஆபத்து இல்லை! இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில், நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக இலங்கையில் சுனாமி ஏற்படக்கூடிய ஆபத்து இல்லை என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சுமாத்ரா தீவுக்கு மேற்கே 81 கி.மீ. தொலைவில் கடலுக்கடியில் சுமார் 67 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் அனைத்து கடலோரப் பகுதிகளுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுனாமி எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில் நண்பகல் அந்த எச்சரிக்கை மீளப் பெற்றுக் கொண்டுள்ளது.

சுனாமி, குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இது தொடர்பான அறிவித்தல்களை ஊடகங்கள் வாயில்களாக மக்களுக்கு தெரியப்படுத்திக் கொண்டு இருப்பதாகவும் இதனால், மக்கள் பதற்றமடையத் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அஸ்கிரிய மகாநாயக்கருடன் ரவி கருணாநாயக்க சந்திப்பு



பதவியைத் துறந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று கண்டிக்கு சென்று அஸ்கிரியபீட மகாநாயக்க தேரரை வரகாகொட ஞானரத்ன சந்தித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக் பதவி வகித்த ரவி கருணாநாயக்க, கடந்த வியாழக்கிழமை இராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், நேற்று முற்பகல் மல்வத்து பீட மகாநாயக்க தேரரை சந்தித்து, அவர் ஆசி பெற்றுள்ளார்.(இ-7)

## அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

### பவ்ரல் அறிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைத்து வருவதாகவும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அரசாங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிற்கு, பவ்ரல் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் வழக்குத் தொடர்ந்து அதற்கு துரித கதியில் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## நயினாதீவில் கடும் காற்றுடன் மழை



நயினாதீவில் நேற்று அதிகாலை ஒரு மணியிலிருந்து அடைமழை பெய்தது. சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்த கடும் காற்றுடன் கூடிய மழையால் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கும் இறங்கு துறைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை சேதமடைந்தது. இரும்புபைப் மூலம் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை மேல் பகுதியில் கிடுகால் வேயப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றுப் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையால் குறித்த கொட்டகை சேதமடைந்தது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லேகலே டெஸ்ட் 2ம் நாள்

## பட்டையைக் கிளப்பினார் பாண்ட்யா

# வெற்றியின் விளிம்பில் இந்தியா

## கத்துக்குட்டிகள் போல் ஆடும் இலங்கை



கார்த்திக் பாண்ட்யாவின் அபார சதமும் குல்தீப் யாதவின் சுழலும் கைகொடுக்க இலங்கை அணிக்கு எதிராக பல்லேகலேயில் நடைபெறும் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றியின் விளிம்பில் உள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் இரு டெஸ்டில் இமாலய வெற்றி பெற்ற இந்திய அணி, 2:0 என தொடரை கைப்பற்றியது. மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் கண்டியில் உள்ள பல்லேகலே மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

முதல் நாள் முடிவில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சகா (13), பாண்ட்யா (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### பாண்ட்யா சதம்

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. சகா 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பாண்ட்யா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சண்டகன் 'சுழலில்' குல்தீப் (26), ஷமி (8) சிக்கினர். அபாரமாக விளையாடிய பாண்ட்யா சர்வதேச அரங்கில் முதல் சதத்தை பதிவு செய்தார். இவர் 108 (8 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள்) ஓட்டங்களில் ஆட்டமிழக்க,

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 487 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. உமேஷ் யாதவ் (3) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக சண்டகன் 132 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

### அபார பந்துவீச்சு

பின், களமிறங்கிய இலங்கை அணிக்கு ஷமி தொல்லை தந்தார். இவரது 'வேகத்தில்' தரங்க (5), கருணாரத்ன (4) சிக்கினர். குசல் மெண்டிஸ் 18 ஓட்டங்கள் எடுத்தார். மத்யூஸ் டக்-அவுட்டானார். குல்தீப் 'சுழலில்' டிக்வெல (29), டில்ருவன் பெரேரா (0) ஆட்டமிழந்தனர்.

அதிகபட்சமாக அணித் தலைவர் சண்டிமல் 48 ஓட்டங்கள் எடுத்தார். மற்றையவர்கள் ஏமாற்ற, இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக குல்தீப் 40 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

### 'பொலோ-ஒன்'


இலங்கை அணி 352 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தமையால், இந்தியா 'பொலோ-ஒன்' வழங்கியது.

இதனையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு தரங்க (7) ஏமாற்றினார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், இலங்கை அணி 2 ஆவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 19 ஓட்டங்கள் எடுத்து, 333 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

கருணாரத்ன (12), புஷ்பகுமார (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# உசைன் போல்ட் குட்பை

## கடைசிப் போட்டியில் காயம்



உலக தடகள சம்பியன்ஷிப் 4X100 மீ., 'ரிலே' பிரிவு இறுதியில் ஜமைக்காவின் போல்ட் காயத்தால் பாதியிலேயே சரிந்தார். தனது தடகள வாழ்க்கையை பதக்கம் இல்லாமல் சோகத்துடன் முடித்தார்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உலக தடகள சம்பியன்ஷிப் நடக்கிறது. இதன் ஆண்களுக்கான 4X100 மீ., ஓட்டத்தின் 'ரிலே' இறுதிப் போட்டி நடந்தது. இதில் 'மின்னல் வேக மனிதன்' போல்ட், ஜூலியன், யோகன் பிளேக், ஒமர் அடங்கிய ஜமைக்கா அணி பங்கேற்றது. தடகள அரங்கில் போல்ட் பங்கேற்கும் கடைசி போட்டி இது என்பதால் 60 ஆயிரம் ரசிகர்கள் குவிந்தனர்.

ஜமைக்கா சார்பில் மூன்றாவது வீரராக ஓடிய பிளேக்கிடம் இருந்து போல்ட் 'பேட்டனை' பெற்றார். ஓட்டத்தை வெற்றியுடன் முடிக்க வேண்டிய நிலையில் சீறிப்பாய்ந்தார். திடீரென, இடது தொடையின் பின்பகுதியில் வலி ஏற்பட தடுமாறினார். வலி அதிகமாக சில வினாடிகளில் கீழே விழுந்தார். இதனால், போட்டியை முழுமையாக முடிக்கவில்லை. போல்ட் காயத்தால் அவதிப்பட்டதை பார்த்த ரசிகர்களும் சோகத்தில் உறைந்தனர். இதில் பிரிட்டன் அணி தங்கம் வென்றது. காட்லின் அடங்கிய அமெரிக்கா வெள்ளியும் ஜப்பான் வெண்கலமும் கைப்பற்றியது.

காயத்தால் அவதிப்பட்ட போல்டிற்கு, 'வீல் சேர்' கொண்டு வரப்பட்டது. ஆனால், சக வீரர்கள் உதவியுடன் நடந்தே சென்றார். 100 மற்றும் 200 மீ., ஓட்டத்தில் உலக சாதனை படைத்த போல்ட், கடைசி போட்டியில் பதக்கம் இல்லாமல் தனது தடகள வாழ்க்கையை முடித்தார்.

போல்டின் காயத்திற்காக எம்.ஆர்.ஐ., 'ஸ்கேன்' எடுக்கப்பட உள்ளது. இதன்பின்பே, காயத்தின் தன்மை தெரிய வரும்.

### ரசிகர்களுக்கு நன்றி

ஒலிம்பிக்கில் 8 தங்கம், உலக தடகள சம்பியன்ஷிப்பில் 11 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலத்துடன் (100 மீ., லண்டன், 2017) போல்ட் தடகள அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார்.

போல்ட் இன்ஸ்டகிராமில் வெளியிட்ட செய்தியில்,' எல்லையற்ற அன்பை வெளிப்படுத்தி ஆதரவு தந்த ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி,' என தெரிவித்துள்ளார்.

### மோ பராவுக்கு வெள்ளி

5000 மீ., ஓட்டத்தின் இறுதியில் பிரிட்டன் வீரர் மோ பரா பங்கேற்றார். இப்போட்டியுடன் தடகள அரங்கிலிருந்து இவர் ஓய்வு பெறுவதால், எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால், பந்தய தூரத்தை 13 நிமிடம் 33:22 வினாடியில் கடந்த இவர் வெள்ளி வென்றார். தங்கம், வெண்கலம் முறையே எதியோப்பியாவின் முக்தர், அமெரிக்காவின் சிலிமோ கைப்பற்றினர்.

* இத்தொடரின் 10000 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்ற மோ பரா, 4 ஒலிம்பிக் தங்கம் கைப்பற்றி உள்ளார். உலக தடகள அரங்கில் 6 தங்கம்; 2 வெள்ளியுடன் தற்போது ஓய்வு பெற்றார்.

## யுவராஜ் சிங்குக்கு 'நோ'

# இந்திய அணி அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான ஒருநாள், இருபது -20 தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் தேர்வு செய்யப்படவில்லை.

இலங்கை சென்றுள்ள இந்திய அணி, ஐந்து ஒருநாள், ஒரு சர்வதேச 'இருபது-20' போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் ஒருநாள் போட்டி தம்புள்ளயில் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. மீதமுள்ள போட்டிகள் கண்டி (ஓக. 24, 27), கொழும்பு (ஓக. 31, செப். 3) நகரங்களில் நடக்கவுள்ளன. ஒரே ஒரு 'இருபது-20' போட்டி வரும் செப். 6ல் கொழும்பில் நடக்கவுள்ளது.

இத்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் தேர்வு செய்யப்படவில்லை. இதேபோல ரெய்னா, தினேஷ் கார்த்திக், ரிஷாப் பண்ட் ஆகியோருக்கும் இடம் கிடைக்கவில்லை. இளம் வீரர் மணிஷ் பாண்டே தேர்வானார். முன்னாள் அணித் தலைவர் தோனி தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

வேகப்பந்துவீச்சாளர்களான மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இளம் வேகப் பந்துவீச்சாளர் ஷர்துல் தாகூர் வாய்ப்பு பெற்றுள்ளார். அனுபவ சுழற்பந்துவீச்சாளர்களான அஷ்வின், ரவிந்திர ஜடேஜாவுக்கு ஓய்வுஅளிககப்பட்டு, இளம் சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீப் யாதவ், யுவேந்திர சாகல், அக்சர் படேல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இந்திய அணி:** விராட் ஹோலி (அணித் தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா (துணைத் தலைவர்), லோகேஷ் ராகுல், மணிஷ் பாண்டே, அஜின்கியா ரகானே, கேதர் ஜாதவ், தோனி (விக்கெட் காப்பாளர்), ஹர்திக் பாண்ட்யா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், யுவேந்திர சாகல், பும்ரா, புவனேஷ்வர் குமார், ஷர்துல் தாகூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் இடைவிலகிய கடற்படை சிப்பாய்

நீர்கொழும்பு குரண சந்தியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கும் இனந் தெரியாத குழுவொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படையிலிருந்து இடைவிலகிய ஒருவர்எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், இரு சந்தேகநபர்கள் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு மேலும் இருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலொன்றிற்கு அமைய, வான் ஒன்றை சோதனையிட்ட வேளையில், குறித்த வானிலிருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (இ-7)



## கண்ணீர் அஞ்சலி

யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி வரும் திரு.க.கலியுகனின் அன்புத் தந்தையார்

அமரர். **தாமோதரம்பிள்ளை கந்தையா**

அவர்களின் பிரிவால் துயரமுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 1941.04.26 இறப்பு 2017-08-11



நானிலத்தில் நல்வாழ்வு
வாழ்ந்து நெறி நின்று
மேநிலையில் பிள்ளைகளுக்கு
நன்னெறியினை புகட்டி
நேற்றுவரை வாழ்ந்த ஐயாவே
இன்று பாரைவிட்டு போனதேனோ!
கணதிறந்து பாராயோ
கவலைகள்தான் தீராதோ.

(124) பாடசாலை சமூகம் யா/சென்ஜேம்ஸ் ம.வி, குருநகர்.



## தெய்வீக சுக அனுபவம் - VI



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்து வரும் தெய்வீக சுக அனுபவம். VI நிகழ்வில் **16.08.2017**ஆம் திகதி இந்திய பிரபல வயலின் இசைக் கலைஞர்களான

- மைசூர் கலாநிதி மஞ்சுநாத்
- நாகராஜ் சகோதரர்கள்

வழங்கும் வயலின் இசைநிகழ்வும் யாழ்ப்பாணத்தின்

- இளம் நாதஸ்வர வித்துவான்

திரு.K.P. குமரன் குழுவினரின் லெஞ்சிற் கச்சேரியும் 17.08.2017 ஆம் திகதி வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் மேற்படி இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்வும் பயிற்சிப் பட்டறையும் நடைபெறவுள்ளது.

(சி-9322)

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்.**



## 1967 விக்றோறியன்ஸ் நண்பர்களின் ஒன்றுகூடல்

1967 இல் பிறந்து யா/சுழிபுரம் விக்றோறியா கல்லூரியில் கல்வி கற்ற நண்பர்களின் ஒன்றுகூடல் 19ஆம் திகதி ஆகஸ்ட் 2017 அன்று 9.30 மணிக்கு சுழிபுரம் பிரதேச சபை கலாசார மண்டபம் வழக்கம்பரை அம்மன் கோவிலடி இல் இடம்பெற உள்ளது. 1974 முதலாம் வகுப்பு 1983 O/L 1986 A/L படித்த அனைத்து நண்பர்களையும் அன்புடன் குடும்பமாக கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

**1967 விக்றோறியன்ஸ்**

தொடர்புகள் : 071 434 6655, 077 959 5689, 071 496 1239, 071 739 7866, 077 068 1968

(C-9320)




## இராசி பலன்

14.08.2017
(ஆடி 29, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சப்தமி மாலை 6.26 மணிவரை
பரணி பின்னிரவு 3.22 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை | | சூரி, செவ்.புத சுக்.ராகு |
| கேது | | | |
| | சனி | | குரு |

**மேடம்:** நல்லவர்களின் தொடர்புகள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பர்.

**இடபம்:** எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாக செயற்படுவது நல்லது, வெளியூர் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு

**கடகம்:** நண்பர்களில் மத்தியில் பாராட்டும், புகழும் அதிகரிக்கும், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடிவரலாம், பயணத்தால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** மறைமுக போட்டிகள் அகலும், வியாபார விருத்தியுண்டு, கொடுக்கல் வாங்கல்களில் உருவான மனஸ்தாபம் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் திருப்திதரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**தனுசு:** புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பெரியவர்களை அனுசரித்துச் செல்லவேண்டிய நாள்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனையொன்றைக் கூறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு, பொன்னான நாள்

**மீனம்:** பொது நல ஈடுபாட்டில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு முன்னெடுத்து வரும் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியிலுள்ள மயானங்களை அகற்று மாறு கோரும் போராட்டம் நேற்று 33 ஆவது நாளாகவும் புத்தூர் கலைமதி மக்கள் மண்டப முன்றலில் நடைபெற்றது.

## 'நாதசொரூபம்'வயலின் நிகழ்வு

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் (ICCR) மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கும் தெய்வீக சுகானுபவம்-6 இன் நாத சொரூபம் சிறப்பு வயலின் இசை நிகழ்வு நாளை மறுதி னம் 16 ஆம் திகதி புதன்கி ழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இடம்பெறும். (இ-3)

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

நாளை செவ்வாய்க்கிழமை ஸ்ரீகிருஷ்ண பரமாத் மாவின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ் சின்மயா மிஷன், சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில், மாலை 4 மணி முதல் 5 மணி வரை பாதுஹா பூஜை, பஜனை மற்றும் பிரம்மச் சாரி ஜாக்ரத் சைதன்யாவின் சத்சங்கம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு அதிக அபராதம் விதிப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் அதிக தொகை அபராதம் விதித்தார்.

கடந்த வாரம் வெவ்வேறு நாட்களில் மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர்களை இளவாலை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவருக்கு மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, வாகன அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை மற்றும் அபாயகரமாக வாகனம் செலுத்தியமைக்காக 14,500 ரூபா தண்டப் பணமும் மற்றைய நபருக்கு மது போதையில் வாகனம் செலுத்தியமை, வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, அபாயகரமாக வாகனம் செலுத்தியமைக்காக 12,000 ரூபா தண்டப் பணமும் மூன்றாம் நபருக்கு ஆவணங்கள் எதுவும் இன்றி வாகனம் செலுத்தியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை, வாகனம் அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமைக்காக 16,000 ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (இ-10-104)

## கேரளக் கஞ்சாவுடன் கைதானவருக்கு தண்டம் 5000 ரூபா செலுத்தினார்

(யாழ்ப்பாணம்)

கேரளக் கஞ்சாவை தன் வசம் வைத்திருந்த நபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி மாதகல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நபரை சோதனையிட்ட போது 1200 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபரே கைது செய்யப்பட்டார். கைதான நபரை கடந்த 10 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது மல்லாகம் நீதவானால் 5000 ரூபா அபராதம் அறவிடப்பட்டதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். என்.ஆர்.சேனநாயக்க தெரிவித்துள்ளார். (இ-10-104)

## நூலகவியல் டிப்ளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகவியல் டிப்ளோமா தரம் (III) பரீட்சை யாழ்ப்பாணத்தில் செப்டெம்பர் 09, 10 ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளதால் இதுவரை விண்ணப்பிக்காத விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று காலதாமதமின்றி அனுப்பி வைக்குமாறு இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## குளிர்ந்தது குடாநாடு



யாழ்.குடாநாட்டில் நேற்று அதிகாலை பரவலாக மழை பெய்தது. நீண்டகாலம் நீடித்த கடும் வரட்சிக்குப் பின்னர் அடைமழை பெய்ததால் குடாநாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, உடுவில், நயினாதீவு, தெல்லிப்பழை உட்பட பல இடங்களில் மழை பெய்தது. (இ)

## கந்தபுராண எழுச்சி விழா

நல்லூர்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 18 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்ம ஸ்ரீ கலாநிதி ம.பால கைலாசநாதசர்மா ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில்கந்த புராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன்,நிகழ்த்துவதுடன் தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-3)




# நயினாதீவில் வீதிகள் புனரமைப்பு





நயினாதீவில் இரண்டு வீதிகள் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீதி புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீரபத்திரர் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகிறது.

சுமார் 150 மீற்றர் வரை இந்த வீதி புனரமைக்கப் பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலங்களில் இந்த வீதியூடாக அதிகளவான மக்கள் பயணம் செய்வது வழமை.

நயினாதீவு பிரதான வீதியும் வீரபத்திரர் வீதியும் சந்திக்கும் இடத்திற்கு அருகிலேயே அமுதசுரபி அன்னதான மடம் உள்ளது.

ஆலயத்திருவிழாக் காலங்களில் அன்னதான மடத்திற்கு வரும் பக்தர்களும் இவ் வீதியாலேயே அதிகளவில் பயணம் மேற்கொள்வர்.

அதேவேளை நயினாதீவு வாழ் மக்களின் மிக முக்கிய போக்குவரத்திற்குரிய வீதியாகவும் இது உள்ளது.

எனவே, வீரபத்திரர்வீதியை புனரமைப்பு செய்வது நயினாதீவு மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை நயினாதீவிலுள்ள ஏனைய வீதிகளையும் விரைவாகப் புனரமைத்து போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

## அனுமதியின்றி கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி கள் விற்பனை செய்த நபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பின் போது பனிப்புலம் பகுதியில் வீடு ஒன்றில் கள் விற்பனை செய்த நபரை கடந்த 7 ஆம் திகதி கைது செய்து 9 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது 5000 ரூபா தண்டப்பணம் அறவிட்டு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டதாக இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். சேனநாயக்க தெரிவித்துள்ளார். (இ-10-104)







சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதியின் ஏற்பாட்டில் வடமாகாண க.பொ.த. சாதாரண தர மாண வர்களுக்கான இலவசக் கருத்தரங்கு கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இக் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற இருக்கிறது. இவ் இலவசக் கருத்தரங்கின் 3 ஆம் நாள் செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



2015 ஆம் ஆண்டு தமிழ்ச் சித்திரைப் புத்தாண்டையொட்டி அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுக்காக விடுத்த புத்தாண்டுச் செய்தியில் பிரஸ்தாபித்திருந்த விடயங்கள் பற்றி 89 ஆவது தொடரில் பார்த்தோம்.

பொதுவில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வெளிநாட்டு அரசுகள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக கருத்துரைப்பினும் அவை எதுவும் வெறும் வார்த்தைகளாக அன்றிச் செயற்பாடுகளாக மாறவில்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான போக்கை உடையவர். ஆனால் அவராலும் எதுவும் செய்யமுடியவில்லை. இப்போது அவர் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் என்ற பதவி நிலைக்குரியவர். ஆக, இனிமேல் அவர் எங்களுக்கு ஆதரவாகக் கதைப்பது கூட நன்மைக்குரியதல்ல என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு வெளிநாட்டு அரசுகள், ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச மனிதநேய அமைப்புக்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எனப் பலரும் எங்கள் தொடர்பில் பல விடயங்களை முன்வைத்த போதிலும் அவை அமுலாகாமலும் அரங்கேறாமலும் போனதன் காரணம் என்ன என்பது தனியான ஆய்வுக்குரியது.

இருந்தும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வார்த்தை வடிவங்கவில் தமிழ்மக்கள் திருப்தியடைவதும் அவற்றைப் பெரிதுபடுத்துவதும் எங்கள் ஏமாற்றத்திற்குக் காரணமாக இருக்குமோ என்று எண்ணுவதிலும் தவறில்லை. எதுவாயினும் நமக்கு வேறு வழிதான் என்ன? உண்டு.

அண்டைநாடு அல்லது அயல் நாடு என்று எதுவும் துணைக்கில்லாத போது வெளிநாடு என்றுகூறி யார் வந்தாலும் அவர்கள் கூறுவதை தேவ வாக்காக நினைப்பதுதான் நம் தலைவிதியாயிற்று. அதனால்தான் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எங்கள் தொடர்பில் எது கதைத்தாலும் அதற்கு நாங்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுக்கின்றோம் என்று கூறுவதிலும் நியாயமுண்டு.

இந்த வகையில்தான் தமிழர் தலைவிதி என்ற இந்த நீண்ட நெடுந்தொடரில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கருத்துக்களும் அவர்களின் இலங்கைக்கான




**தமிழர்கள்மீது பாலியல் வன்முறை பான் கீ மூன் குற்றச்சாட்டு**

விஜயங்களும் மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்த வரிசையில், ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் இலங்கையின் நிலவரம் தொடர்பில் ஒரு முக்கியமான அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. யுத்தத்திற்குப் பின்னரும் இது தொடர்கின்றது என்பதாக பான் கீ மூன் வலுவான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் விடுத்த இந்தக் குற்றச்சாட்டு இலங்கை அரசுக்கு மிகவும் பாதகமாக அமைந்தது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பான் கீ மூனை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆற்றிய உரையில் உலகில் பாலியல் வன்முறைகளை ஆயுதமாகப் பயன்படுத்தும் அக்கிரமம் இலங்கை உள்ளிட்ட 19 நாடுகளில் இடம்பெறுகின்றது எனக் குறிப்பிட்டிருந்தார். போர்க் குற்றங்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் என்பது தொடர்பான அறிக்கையிலேயே அவர் மேற்போந்த விடயத்தை பிரஸ்தாபித்திருந்தார்.

உண்மையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் இவ்அறிக்கை; இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் வன்மங்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாயினும் 2009 ஆம் ஆண்டு வன்னியில் நடந்த யுத்தத்தின் போது தமிழ் மக்கள் கொல்லப்படுவதை நிறுத்துவதிலோ அன்றி அது தொடர்பில் இலங்கை அரசை எச்சரிக்கை செய்வதிலோ பான் கீ மூன் எந்தக் கவனமும் செலுத்தவில்லை.

மாறாக யுத்தம் முடிந்த பின்பு இலங்கை அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் வந்து அதில் இருந்தவாறு இறுதி யுத்தம் நடந்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைப் பார்த்துவிட்டு சென்றார்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள்; ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டவரென்றும் வன்னி யுத்தத்தில் பல்லாயிரக்கணக் கான தமிழ் மக்களின் உயிர்ப் பலியைத் தடுக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டுவர்.

வன்னி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் நியாயத்தன்மை யற்ற செயற்பாட்டின் விளைவு என்று கூறுவதில் மிகை இருக்க முடியாது.

தமிழ் மக்கள் தவிர்ந்த உலகின் வேறு எந்த இன மக்களுக்கும் இப்படியான ஒரு இழப்பு ஏற்பட்டு அதில் பான் கீ மூன் தலையிடாமல் இருந்திருந்தால், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நேர்மையற்றவர்; ஒரு பக்கம் சார்ந்து செயற்பட்டுள்ளார்; அவரின் நியாயத்தன்மை தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்திருக்கும்.

ஆனால் இங்கு பாதிக்கப்பட்டவர்கள் ஈழத் தமிழ் மக்கள் என்பதால் பான் கீ மூன் எந்தப் பாதகமும் செய்யாதவராக தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். எது எவ்வாறாயினும் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில் தான் விட்ட தவறுக்குப் பிராயச்சித்தம் செய்யும் பொருட்டு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் கொடுமைகள் தொடர்பிலாவது உண்மையைக் கூறி விடவேண்டும் என்று நினைத்து பான் கீ மூன் தனது அறிக்கையை வெளியிட்டிருக்கலாம்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலை படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு இன்று




தமிழரின் நீண்ட சோக வரலாற்றில் 2006 ஓகஸ்ட் 14 இலங்கை அரச படைகளின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களால் பரிதாபமாகக் கொல்லப்பட்ட 61 பிஞ்சுகளின் 11 ஆம் ஆண்டு நினைவாக இன்று பிற்பகல் 3.30 மணியளவில் வள்ளிபுனத்திலுள்ள செஞ்சோலை வளாக வீதி யில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நினை வேந்தல் நிகழ்வு நடைபெறும்.

உணர்வு பூர்வமாக நடைபெறும் இந் நிகழ்வில் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றனர் ஏற்பாட்டாளர்கள். (3-8)

# பெண்களுக்கான இலவச சமையல் பயிற்சிகள்

(மல்லாவி)

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா காரியாலயம் ஏற்பாடு செய்த பொலிஸார். பொதுமக்கள் நல்லுறவைக் கட்டியெழுப் பும் வேலைத் திட்டத்தின் கீழ் "பெண்களுக்கான இலவச சமையல் பயிற்சிகள்" என்னும் தலைப்பில் ஒரு நாள் பயிற்சி நெறி நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி நடை பெற்றுள்ளது. இப்பயிற்சி நெறியினை பிரபல சமையல் கலை நிபுணர்கள் கலந்து கொண்டு சமையல் பயிற்சியினை வழங்கியிருந்தனர். (8-15)



# துணுக்காய் குடியிருப்பு மக்களின் கோரிக்கை

முல்லைத்தீவு - துணுக்காய் குடியிருப்பு பகுதியில் உள்ள குடியிருப்பு வீதிகள் புனரமைக்கப்படாமை மற்றும் காட்டு யானைகளின் தொல்லையால் இந்த பகுதியில் வாழும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல துன்பங்களை அனுபவித்து வருவதாக இப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள துணுக்காய் குடியிருப்பு பகுதியில் தற்போது நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந் நிலையில் குடியிருப்பின் பிரதான வீதியாகக் காணப்படும் துணுக்காய் கோட்டைகட்டியகுளம், வீதி மாத்திரமே புனரமைப்பு செய்யப்பட்டுள்ள போதும், இந்த வீதியிலிருந்து குடியிருப்புக்களுக்கு செல்லும் எந்த வீதியும் புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், முதியோர் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதனைவிட தினமும் இப்பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தினமும் தாங்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலையே காணப்படுவதாகவும் இப் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்கள் தமது கிராமங்களிலுள்ள குடியிருப்பு வீதிகளைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்கள் அன்றாடம் கூலி வேலை செய்தே வாழ வேண்டிய நிலையில் இங்குள்ள பல குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய வரட்சியினால் கூலி வேலை எதனையும் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.


அத்துடன், வீதிகள் புனரமைக்கப்படாமை, தொழில் வாய்ப்பின்மை, குடிநீர்ப் பிரச்சினை இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கான தீர்வினை பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-8)




# தமிழரசுக் கட்சியுடன் தனித்து பேச்சு நடத்தி உடன்பாட்டை எட்ட ரெலோ விருப்பம்!

## கட்சியின் செயலாளர் சிறிகாந்தா தெரிவிப்பு





தமிழரசுக் கட்சியுடன் ரெலோ அமைப்பு தனித்து பேச்சு நடத்தி அரசியல் தீர்வு விடயத்தில் உடன்பாடு ஒன்றினை ஏற்படுத்தி காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க ரெலோ தலைமைக்குழு விரும்புவதாக ரெலோ கட்சியின் செயலாளர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை இடம் பெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை முதலமைச்சரின் அமைச்சரவை மாற்றத்திற்கு வழிசமைக்கும் முகமாக அமைச்சு பதவியை இராஜினாமா செய்யுமாறு ரெலோ தலைமைக்குழு கோரியுள்ளதாக தெரிவித்த அவர், அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கொண்டு வர இருக்கின்ற 20 ஆவது திருத்தம் தொடர்பில் விவாதித்து கூட்டமைப்பு ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதற்கு ஏதுவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிடம் வேண்டுகோள் விடுகின்றோம். குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமை ப்பின் தலைவருக்கு இது தொடர்பாக எங்களுடைய எழுத்து மூலமான வேண்டு கோள் அனுப்பப்படுகிறது.

மேலும், அரசியலமைப்பு விவகாரங்கள் சம்பந்தமாகவும் எமது அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காமல், அடிப்படை கோரிக்கைகளை சமரசம் செய்து கொள்ளாமல், அதே நேரத்தில் இரண்டு பிரதான சிங்கள கட்சிகளும் கூட்டாக அரசு அமைத்து அந்த அரசு நீடித்துக் கொண்டிருக்கின்ற இன்றைய அரசியல் சூழ்நிலை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த அரசியல் தீர்வு முயற்சி களை தொடர்ந்து விரைவாக முன்னெடுப்பதற்கு ஏதுவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். இது தொடர்பாக ஏற்கனவே ஒரு சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசுக் கட்சியினுடைய சம்பந்தனுடனும், அந்தக் கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராஜா, அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சுமந்திரன் ஆகியோருடனும் நடத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட நாங்கள் முழுமையான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒரு குழு தமிழரசுக் கட்சியின் சார்பிலும், எங்களது கட்சியின் சார்பில் ஒரு குழுவும் இந்த பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க உதவியாக இருக்கும் எனவும், அதனைத் தொடர்ந்து ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைக் கூட்டி அதில் பேசி அனைத்துப் பங்காளிக் கட்சிகளும் ஒரு நிலைப் பாட்டில் குரல் எழுப்பக் கூடிய நிலை உருவாகும் எனவும் நாம் கருதுகின்றோம் எனத் தெரிவித்தார். (8)



நிலமெஹர நடமாடும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலக வளாகத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிறிஸ்ணேந்திரன் தலைமையில் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள், முதியவர்களைக் கொன்றே அரசு யுத்த வெற்றியினை ஈட்டியது

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்

யுத்தம்நிறைவுற்றது எனக் கூறிக் கொண்ட கடந்தகால அரசு சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலரை கொலை செய்தே குறித்த வெற்றியினை ஈட்டியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்களிற்கான நில மெஹற ஜனாதிபதி நடமாடும் சேவை நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

யுத்தம் நிறைவுற்றது என கூறிக்கொண்ட கடந்த கால அரசு சிறுவர்கள், முதியவர்கள் என பலரை கொலை செய்தே குறித்த வெற்றியை நாட்டியது.

மக்களின் வாக்குகளால் ஆட்சியேறிய அரசுகள் அதே மக்களை அழித்தே யுத்தத்தில் வெற்றி கொண்டது.

இன்று ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கியிருந்தோம். அவருக்கு இரண்டு கால்களும் இல்லை. அவருக்கு இப்போதே சக்கர நாற்காலி வழங்கப்படுகின்றது. யுத்த வெற்றி கொண்டாடிய அரசு இவர்கள் போன்றோருக்கு எதையும் செய்யவில்லை.

நல்லாட்சி அரசு அமைக்கப்பட்டும் 3 வருடங்களின் பின்னரே இவருக்கு சக்கர நாற்காலி கிடைத்துள்ளது.

இவ்வாறு பலர் அங்கவீனர்களாகவும் அநாதைகளாக்கப்பட்டவர்களாகவும் இங்குள்ளனர். இவர்களை போன்றவர்களிற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என மேலும் அவர் குறிப்பிட்டார். (8-312)




# வடமாகாணக் கலைஞர் விபரத்திரட்டு நூலுக்கான விபரங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கலைப் பணியினை ஆவணப்படுத்தும் முகமாகப் புதுக்குடியிருப்பு யோகாப் பயிற்சிக் கல்லூரியின் இலக்கியப் பெருமன்றத்தினால் வடமாகாணக் கலைஞர் விபரத்திரட்டு நூலுக்கான விபரங்கள் கோரப்படுகின்றன.

இலக்கியம், சங்கீதம், வில்லிசை, நாதஸ்வரம், தவில் மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், நாடகம், நாட்டுக் கூத்து, நடனம், கட்புலக்கலை, சிற்பம், ஓவியம், கைவினைக் கலை ஒப்பனை, தொழில் நுட்பக்கலைகள், கட்டக்கலை, சினிமா, பாரம்பரியக் கலைகள், யோகாசனம், புகைப் படப்பிடிப்பு ,கராத்தே, சிலம்பாட்டம், வர்மக்கலை ஆகிய கலைகளைச் சார்ந்த மூத்த கலைஞர்கள், இளம் கலைஞர்கள் யாவரும் தமது முழுப் பெயர், விலாசம், மாவட்டம், துறை, தொலைபேசி இலக்கம், கடவுச் சீட்டு அளவுடைய இரு புகைப்படங்கள் (புகைப் படத்தின் பின்னால் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்) உள்ளடங்கலாக தமது கலைப் பணியில் விபரத்தினை A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் 2017.09.25 ஆம் திகதிக்கு முன்னர் தட்டச்சு செய்தோ, தெளிவான கையெழுத்து செய்தோ பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஜெயம்ஜெகன், இயக்குநர், இலக்கியப் பெருமன்றம், யோகா பயிற்சிக் கல்லூரி, மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு. மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் -077 518 5731 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளலாம். (7-8)

# அத்துமீறி அன்னாசிப் பயிர்ச் செய்கை

## மக்கள் கடும் விசனம்





மன்னார் மாந்தைத் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பரப்புக்கடந்தான் பகுதியில் இஸ்ரேல் நாட்டின் பிரஜை ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அன்னாசி பயிர்ச்செய்கை குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் 2014ஆம் ஆண்டு தொடக்கம் அன்னாசி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருவதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

பரப்புக்கடந்தான் பகுதியில் சுமார் 160 ஏக்கர் காடு அழிக்கப்பட்டு அன்னாசி பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் காடு அழிக்கப்பட்ட நிலையில் மரங்கள் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு தென் பகுதிக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான குறித்த காணி இலங் கையர் ஒருவர் ஊடாக இஸ் ரேல் நாட்டுப் பிரஜைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அன்னாசி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 160 ஏக்கர் காணியில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 100 ஏக்கர் காணி 1989ஆம் ஆண்டு கச்சேரியூடாக மக்களுக்கு வழங்கப்பட்ட காணியாகும்.

எனினும், குறித்த காணியில் குடியிருந்த மக்கள் இடம் பெயர்ந்து தற்போது இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். மக்களுக்கு உரித்தான காணியினை பெற்றுத் தருமாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (3-8)

# மழையிலும் வெயிலிலும் போராடும் எம் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

காணிகளை மீளத்தருமாறு வேண்டி எம் மக்கள் கடந்த 165 நாட்களாக மழையிலும் வெயிலிலும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். கூடிய விரைவில் இந்தக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாப்பிலவிலுள்ள இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீட்க வேண்டி கடந்த 11 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அக்கடிதத்தில், இந்த விடயம் தொடர்பில் தங்களது எண்ணப்பாட்டினை நான் நன்கறிவேன்.

மக்களுக்குக் காணிகளை வழங்குவது தொடர்பில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம். இவர்கள் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள். இந்த மக்கள் தங்களது காணிகளுக்குத் திரும்பிச் செல்ல விரும்புகிறார்கள். இவர்களது பிறப்புரிமை மறுக்கப்படலாகாது. ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக தங்களது காணிகளிலிருந்து இவர்கள் வெளியேறியுள்ளார் கள்.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்துள்ளது. இந்தக் காணிகளின் வாயிலில் இந்தக் காணிகளை மீளத்தருமாறு வேண்டி, இந்தமக்கள் கடந்த 165 நாட்களாக மழையிலும் வெயிலிலும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் உறுதியுடன் இருக்கிறார்கள்.

மிகுந்த மரியாதையுடன் நான் வேண்டிக்கொள்வதென்னவென்றால், கூடிய விரைவில் இந்தக் காணிகள் மக்களிடம்ஒப்படைக்கப்படவேண்டும்

தாங்கள் இது தொடர்பில் ஒரு வழிகாட்டலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேவையேற்படின், தாங்கள் இது தொடர்பில் முடிவெடுக்கும்படியான ஒரு கூட்டத்தினை ஏற்பாடு செய்யுமாறும் தயவாக வேண்டுகிறேன். இது தொடர்பில் விரைவான தீர்வொன்றினை நான் தயவுடன் எதிர்பார்க்கிறேன் என்றுள்ளது. (8)

# மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

(கிளிநொச்சி)

விசன் கெயார் நிறுவனத்தின் அனுசரணையில் கிளிநொச்சி படையினரின் ஏற்பாட்டில் 200 பேருக்கு நேற்று முன்தினம் சனிக் கிழமை மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைமடு தாமரைத் தடாக மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பார்வை குறைபாடுகள் உள்ள 200 பேருக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி படையினரின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன விசேட விருந்தினராக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வைத்துள்ளார். (8)

# முல்லையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்







(மல்லாவி)


நெடுங்கேணி பொலிஸாரின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணி ஒலுமடு சிறுவர் பாடசாலையில் நடைபெற்றுள்ளது

நெடுங்கேணிபொலிஸ் பொறுப்பதிகாரி பண்டாரவின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஒலுமடு சிறுவர் பாடசாலையில் சுற்றுப்புறச்சூழல்கள், டெங்கு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டு சிரமதான பணியும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தை உலுக்கிய செஞ்சோலைப் படுகொலை



தமிழரின் நீண்ட சோக வரலாற்றில் இலங்கைப் படைகளின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களால் பரிதாபமாகக் கொல்லப்பட்ட 61 பிஞ்சுகளின் குருதியால் எழுதப்பட்டுள்ளது 2006 ஒகஸ்ட் 14.

பல நாடுகளுக்கு, இனங்களுக்கு இது ஒரு பொருட்டாக இல்லாது போனாலும் அழுது அழுது ஆற முடியாமல் அகதிகளாய் அலையும் தமிழினத்தால் இதனைத் தாங்கிக் கொள்ளும் சக்தியில்லையென்றே கூற வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட வள்ளிபுனத்தில் செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் வளாகமே கடந்த 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கண்மூடித்தனமாக வான் தாக்குதல்களுக்கு இலக்காகியது.

இலங்கை அரச படைகளின் நான்கு அதி வேக யுத்த விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய குண்டுகள் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்களை பறித்தும் 155. இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடைந்தும் இருந்தனர்.

கொல்லப்பட்டவர்களின் சிலரது உடல்கள் சிதறியபடி காணப்பட்டிருந்தன. காயமடைந்தவர்களில் 25 மாணவிகளது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. காயமடைந்தவர்களில் பலர் அவயவங்களை இழந்திருந்தனர். சிலர் கைகள், கால்கள் இரண்டையும் இழந்திருந்தனர்.

செஞ்சோலை வளாகத்தில் நடந்த செய்தி கேட்டு ஓடி வந்த தாயொருவர் "பத்து நாள்கூட என்னால் விட்டிட்டு இருக்க ஏலாதுண்டு முதலில் மாட்டன்என்று தானே சொன்னேன். ஆனால் நல்ல விடயம் எண்டு எல்லோரும் சொன்னதால தானே விட்டனான். கடைசில இப்பிடியாப் போச்சே" என தலையில் அடித்து இறந்து கிடந்த மகளைத் தூக்கி "வா வீட்டை போவம்" எனக் கேட்டதும் அங்கு நின்ற அனைவரும் கதறியழுதனர்.

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளை இலங்கை படை கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளெனக் கூறி வெளியுலகிற்கு உண்மையை மூடி மறைக்க முயன்றது அனைவரையும் ஆத்திரமடையச் செய்தது.

செஞ்சோலை வளாகம் புலிகளின் பயிற்சி முகாமென்றும் அங்கு சிறுவயது போராளிகளே இருந்ததாகவும் கூறிய அரச படைகள் கொல்லப்பட்டது சிறுவயது போராளிகளே என்றும் அரசுக்கு எதிராகச் செயற்படும் எவராயினும் வயது, பால் வேறுபாடின்றி கொல்வோம் எனவும் கூறியிருந்தது இலங்கை அரசு.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கும் வைத்தியசாலைக்கும் நேரடியாகச் சென்று விசாரணை களை மேற்கொண்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும் யுனிசெப்பும் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மாணவிகள் என்பதனை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கைப் படையின் இம் மிலேச்சத்தனமான தாக்குதலின் பின்னர் அப்பகுதி வாழ் பொது மக்களினதும் போராளிகளினதும் மருத்துவர்களினதும் மீட்புப் பணிகளின் போதான பங்களிப்புக்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததும் வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படாததும் ஆகும். (இ)

# எதிரணி மீதான குற்றச்சாட்டுக்களை அரசால் உறுதிப்படுத்த முடியவில்லை

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்த முடியாது போயுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

விசாரணைகளை நடத்திய போதிலும் இதுவரை குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்த முடியவில்லை. எதிர்க்கட்சியினர் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானது என்பது உறுதியாகி வருகிறது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# மலையகத்தில் ஐஸ் மழை!



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பல இடங்களிலும் மழை பெய்துள்ளது. இந்த நிலையில் நுவரெலியாவில் ஐஸ் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மற்றும் வெளிமடை பகுதிகளிலேயே இவ்வாறு ஐஸ்மழை பெய்துள்ளது.

மத்திய மலை நாட்டில் அண்மைக்காலமாக அடைமழை பெய்து வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிமுதல் 3.15 மணிவரை ஐஸ் மழை பெய்து ள்ளது.

இதனால் குறித்த பகுதிகளில் கடுமையான குளிர் நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மீதமான நிதி எங்கே? கூட்டு எதிரணி கேள்வி

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை குறைந்ததன் காரணமாக அரசாங்கத்திடம் மீதமான நிதிக்கு என்ன நடந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கம்பஹா உடுகம்பளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதனிடையே தேர்தலை நடத்தினால், அரசாங்கம் தோல்வியடையும் என்ற காரணத்தினாலேயே அரசாங்கம் இரண்டு வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால், சர்வதேச தடைகளை எதிர் நோக்க நேரிட்டிருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் தேர்தலை நடத்துவதற்



கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த செம்மரக்கட்டைகள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த மூன்று தொன் செம்மரக் கட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 10 மூடை பீடி இலைகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளதாகவும், அவற்றின் மதிப்பு சுமார் ஒரு கோடி என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடி துறைமுகம் ஊடாக இலங்கைக்கு செம்மரக் கட்டைகள் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு வந்துள்ளதாக சுங்கவரித் துறையினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் படகு மூலம் இலங்கைக்கு செம்மரக் கட்டைகளை கடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில், இந்த செம்மரக் கட்டைகளும், பீடி இலைகளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், குறித்த கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வட மாநிலங்களில் இருந்து தூத்துக்குடிக்கு செம்மரக் கட்டை மற்றும் பீடி இலைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அவை இலங்கை வழியாக மலேசியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கும், பீடி இலைகள் இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நல்லாட்சி அரசு தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும்

## விக்கிரமபாகு கருணாரட்ன அறிவுரை

நல்லாட்சி அரசாங்கத்தின் தவறுகளைத் திருத்திக் கொள்ளுமாறு மக்களுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதிகளை மீறிச் செல்ல இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தில் சில தவறுகள் இருந்தாலும் வேறு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் தேவையில்லை எனச் சுட்டிக்காட்டிய விக்கிரமபாகு கருணாரட்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரி சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர பங்களிப்பு செய்த அனைத்து தரப்பினரும் இணைந்து விகாரமாதேவி பூங்காவில் நாளை 15 ஆம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளதாகவும் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் நல்லைக்கந்தன்

முருக பத்தியால் அளவற்ற அருளாற்றலை பெற்றவர் அருணகிரிநாதர். ஞான பண்டிதனான முருகப் பெருமானே குருவாக வந்து" சும்மாயிரு சொல்லற " என்று உபதேசம் செய்து வேலின் அடியினால் அவரது நாவிலே பிரணவத்தைஎழுதிமுத்திஎன்று பாடுமாறு பணித் தருளினார். அன்றிலிருந்து திருமுருகனின் பேரழகையும் அருளாற்றலையும்தமிழழகால் அலங்கரித்தார் அருணகிரிநாதர்.

அவர் பாடியருளிய திருப்புகழ், திருவகுப்பு, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், கந்தரந்தாதி ஆகிய எல்லாப் பாடல்களிலும் மடை திறந்த வெள்ளம் போல தமிழும் பக்தியும் இரண்டறக் கலந்து பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இத்துணை பக்தி வெள்ள பிரவாகத்தில் அருணகிரிநாதர் மட்டுமன்றி அவர் தம் பாடல்களை கற்றுணர்ந்த வர்கள் யாவருமே நனைந்து திழைத்தவர் ஆகினர். திரு முருகன் ஒருவனையே பாடும் நியமம் கொண்டு பரமபதி விரத நிலை இதுவே என உலகிற்கு உணர்த்திய தத்துவத்தால் அருணகிரிநாதர் பரம குரு நாதராக நிகழ்கின்றார். ஏனெனில் நாதா என்று முருகப் பெருமானே அழைக்க நாதப்பிரம்மமாய் விளங்கியவர் அருணகிரிநாதர்.

முருகப்பெருமானிடம் நேரடியாகவே பிரணவ உபதேசம் பெற்றவர்களாக மூவர் மட்டுமே விளங்குகின்றனர். அவர்களில் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானிற்கும் அகத்திய மாமுனிவர்க்கும் அடுத்த படியாக அருணகிரிநாதர் அமைகின்றார்.ஞானம் என்னும் முருகனின் அருளழகையும் தமிழ் என்னும் முருகனின் வடிவழகையும் பக்தி என்கின்ற மார்க்கத்திலே ஒன்றிக்க செய்து தேனினுமினிய பாடல்களாக்கி உருகாமனத்தையும் உள்ளுருக்கி உணர வைத்தவர் அருணகிரிநாதர். இவ்வகையிலே தமிழ்நாட்டின் திருவெண்ணாமலை தொடக்கம் ஈழத்தின் கதிர்காமம் வரைக்கும் முருகப்பெருமான் கோயில் கொண்ட திருத்தலங்களை நெஞ்சிருத்தி பாடிய திருப்புகழ் மாலைகளில் யாழ்ப்பாணத்து நல்லைக் கந்தப் பெருமானையும் இவ்வண்ணமாக பாடியருளினார்.



நல்லைப்பகுதியில் அருணகிரிநாதர் உற்சவம் இன்றாகும் (18 ஆம் திருவிழா)

பூத்தார் சூடுங் கொத்தலர்
குழலியர் பார்த்ததால்
வேலுங் கட்கமு மதன் விடு
போர்க் கார் நீடுங் கட்சர
மொடு நமன் விடுதூதும்
போற்றாய் நாளுங்
கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு
ப்ரமையது பூட்டா மாயங்
கற்றமை விழியினர்
அமுதூறல் வாய்த்தவர்
பேதஞ் செப்புபொய்
விரிகியர் நோற்றே நூலின்
சிற்றிடை யிடைபடை
வாட்டாய் வீசிங் கர்ப்புர
ம்ருகமதம் அகிலாரும்
மாப்பூ ணாரங் கச்சணி
முலையினர் வேட்பூ
ணாகங் கெட்டன
னுனதுமெய் வாக்கால்
ஞானம் பெற்றினி வழிபட
அருளாயோ ஆத்தாள்
மால்தங் கைச்சிக
னிகையுமை கூத்தா டானந்
தச்சிகை திரிபுரை யாட்பேய்
பூதஞ் சுற்றிய பயிரவி
புவனேசை ஆக்கா யாவும்
பற்றியெ திரிபுற நோக்கா
ஏதுஞ் செற்றவள்
திருவினை யாட்டா லீசன்
பக்கம் துறைபவள்
பெறுசேயே ஏத்தா நாளுந்
தர்ப்பண செபமாடு நீத்தார்
ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி
ருள்தரு முருகோனே
ஏற்போர் தாம்வந்
திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும்
பொற்பரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணாயன் பட்டின
மருவிய பெருமாளே!

வாக்கிற்கு அருணகிரி என போற்றப்படும் அருணகிரி நாதப் பெருமான் இத்திருப்புகழ் பாடலிலே "வாக்கால் ஞானம் பெற்றினி வழி பட அருளாயே" என்று நல்லைக் கந்தனை விழித்து கேட்டிருப்பதானது அவனடியார்கள் ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் இருத்தி துதிக்கப் பட வேண்டிய முருக மந்திரமாகும்.

துரை கணேசமூர்த்தி



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் 16 ஆம் திருவிழாவின் போது வடிக்கப் பட்ட மணற்சிற்பம்.

## தெய்வீக இசையரங்கின் 18ம் நாள் நிகழ்வு இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருக்ன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 18ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்ட பத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-மதுராங்கி ஸ்ரீதரன், வயலின்-கா.குகபரன், மிருதங்கம்- க.கஜன், கெஞ்சிரா-நா.சிவசுந்தரசர்மா, கடம் - கே.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## இசைப் பேருரையில் 'சூர்ப்பனகை'

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகாசபை நடத்தி வரும் தெய்வீக இசைப் பேருரை (கதாபிரசங்கம்) இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் இடம் பெறும்.கந்தபுராணம் பற்றிய தொடர் இசைப் பேரு ரையில் " சூர்ப்பனகை" எனும் தலைப்பில் நல்லைக் குரு மணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி கலாபூஷ ணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாபிர சங்கம் நிகழ்த்துவார். (இ-3)

## "புலன்களின் கட்டுப்பாடு" ஆன்மீக அருளுரை இன்று

நல்லூர் உற்சவ காலத் தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அரு ளுரை(ஞானயக்ஞம்) இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணி வரை இல 700,பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின் மயா மிஷனில் இடம் பெறும்.இதில் புலன்களின் கட்டுப் பாடு எனும் தலைப்பில் பிரம் மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

## தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளில் இன்று திருமுறையும் வாழ்வும் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 18 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமார சுவாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலை மையில் இடம் பெறும்.இதில் " திருமுறையும் வாழ்வும்" எனும் தலைப்பில் சைவப் புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றுவார்.(இ-3)

## கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமிஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் நா.சிவசங்கரக் குருக்கள் கலந்து கொள்வார்.

இதில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிவபோகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கதாபிரசங்கம், கைலாசநாதர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நாடகம், மஞ்சவனப்பதி முருகன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் நடனம் என்பன இடம் பெறவுள்ளதுடன் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கும்பவாளிஅறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு என்பன இடம்பெறும். (இ-3)




## வேண்டுதல்

வரலாற்று வளம் கொண்ட வேலவா
வள்ளியை வசம் செய்த வீரவா
நாம் வேண்டுவதை தீர்ப்பதற்கு விரைந்துவா

கருணையின் கலசமே தமிழின் வடிவமே
அழகன் அரசனே அலங்கார அப்பனே



நாம் வேண்டுவதெல்லாம்
நம்மினத்தின் துயரமாய்

நம்பியவர் நாணயத்தில் மறைந்துவிட
நம்பிய நாம் நட்டாற்றில் விடுபட்டோம்

படை கொண்டு சூரரை வதைத்தவா
நம் கடை கெட்ட சூரரை வெல்வதா கடினம்

தேன்நிலா
நல்லூர்.

## அடியவர் முன் வந்து நிற்பான்

வெற்றிக்கு முருகன் வேலே சாட்சி- குமரன்
விழிகட்கு அரிதாகும் காட்சி!
பற்றினால் அவன் பாதம் பற்று-அமர
பக்தியில் அவன் அருள் பெற்று



சேவலை கொடியாகக் கொண்டவீரன்-சூரர்
சேனையைப் புறங்கண்ட தீரன்
ஆவலை அவன் முடித்து வைப்பான்-நேராய்
அடியவர் முன்னால் வந்து நிற்பான்

அம்சா பரமநாதன்
தாவடி.

## வருவாயா முருகா

நல்லையம்பதியிலே
வள்ளி இடப்புறத்திலும்
தேவயானை வலம்புறத்திலும் அமர்ந்திருக்க
வெற்றிவேலுடன் வலம் வரும்
உமையவளின் மைந்தனே
உள்ளம் எனும் கோவிலிலே
எழுந்தருளி இருக்கும்
எங்கள் பெருமானே
காணாமல் போன
எம் உறவுகளை காத்தருள
கந்தனே நீ வருவாயா.




செ.கந்தவேள்
இடைக்காடு.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

வேத மாமுதற் போத வேலவா
வெற்றி யாங்கொடி பற்றும் பாலகா
ஆதி யந்தமே யற்ற நாயகா
அவனி காக்கவே யுற்ற தூயவா
பாதந் தூக்கிடும் நாதன் சக்தியே
பற்றி பெற்றவ னுற்ற சித்தியே
நாத மானதோர் கீத மானவா
நர்த்த னம்புரி நல்லைக் கந்தப்பா!



கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

நல்லூர்க்கந்தன் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

KANESAN STORES
கணேசன் ஸ்ரோர்ஸ்
Wholesale & Retail Dealers in TEXTILES
077 445 7344
021 222 2830
201,K.K.S Road, Jaffna
K.Sivanesan Proprietor
(C-9330)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோரக்பூர் வைத்தியசாலையில் தொடரும் கொடூரம்



## 70 குழந்தைகள் பலி!

உத்தர பிரதேசம் மாநிலம் கோரக்பூர் வைத்தியசாலையில் ஒட்சிசன் பற்றாக்குறை காரணமாக 70 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

உத்தரபிரதேசம் மாநிலம் கோராக்பூரில் உள்ள பாபா ராகவ் தாஸ் அரச மருத்துவக் கல்லூரி வைத்திய சாலையில் ஒட்சிசன் பற்றாக்குறை காரணமாக 60இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது.

இக் கொடூர சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. வைத்தியசாலை நிர்வாகத்தின் அலட்சியமே இந்த சம்பவத்துக்கும் காரணம் என்று முதல்வர் யோகி ஆதித்யநாத் குற்றம் சாட்டினார். மேலும் வைத்தியசாலை முதல்வரும் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கோரக்பூர் வைத்தியசாலையில் நேற்றுக்காலை மேலும் ஒரு குழந்தை உயிரிழந்தது. இதனால் குழந்தைகளின் பலி எண்ணிக்கை 70-ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் 11 குழந்தைகள் உயிரிழந்துள்ளது. வெள்ளிக்கிழமை வரை பலி எண்ணிக்கை 60-ஆக இருந்தது. இதனிடையே, வைத்தியசாலையில் முதல்வர் ஆதித்யநாத் நேற்று பார்வையிட்டுள்ளார். (3-8)

# காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லைக்கட்டுப்பாடு கோடு அருகே பாகிஸ்தான் ராணுவம் நேற்று மாலை அத்துமீறி தாக்குதல் நடத்தியதில் இந்திய வீரர் ஜக்ரம் சிங் தோமர் உயிரிழந்தார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் எல்லைக்கட்டுப்பாடு கோடு அருகே கடந்த இரு மாதங்களில் பலமுறை பாகிஸ்தான் ராணுவத்தினர் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால், 10இற்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்கள்பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், நேற்று மாலை கே.ஜி செக்டார் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் இந்திய நிலைகளை குறிவைத்து துப்பாக்கி மற்றும் சிறிய ரக பீரங்கி குண்டுகளால் தாக்குதல் நடத்தினர். இதற்கு, இந்திய ராணுவத்தின் தரப்பிலும் தக்க பதிலடி கொடுக்கப்பட்டது. சில மணி நேரங்கள் நீடித்த இந்த சண்டையில் இந்திய வீரர் ஜக்ரம்சிங்தோமர் (வயது-42) உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நீடித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் ஒவ்வொரு தோட்டாவுக்கும் இந்திய ராணுவம் 10தோட்டாக்களை அனுப்பும் என ஜம்மு-காஷ்மீர் துணை முதலமைச்சர் நிர்மல்சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜம்மு-காஷ்மீர் துணை முதல்வர் நிர்மல்சிங் தெரிவிக்கையில், 'பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதலுக்கு அவர்கள் கடும் விளைவை சந்திப்பார்கள். பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு தோட்டாவுக்கு பதிலாக இந்திய ராணுவம் 10 தோட்டாக்களை திருப்பி அனுப்பும்.

பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு அவர்களுக்கு புரியும் மொழியிலேயே இந்திய ராணுவம் பதிலடி கொடுத்து வருகிறது.

பாகிஸ்தான் ராணுவத்தினர் எல்லையில் வசிக்கும் படைவீரர்களை கொடூரமாக கொன்று வருகின்றனர். ஆனால் நாம் அப்படி அல்ல. உரிய முறைப்படி விசாரணை நடத்த உத்தரவிட்டு வருகிறோம்' என தெரிவித்துள்ளார். (3-8)

பாரதச் செய்தி

# தமிழகத்தில் 3 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு

## வானிலை ஆய்வு மைய அதிகாரி தகவல்

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

தென் மேற்கு பருவ மழை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. ஆனால் கடந்த வருடத்தைப் போல தென் மேற்கு பருவமழை ஏமாற்றி விடாமல் ஓரளவு மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால் பருவமழை ஜூன் மாதத்தில் தொடங்கிய போது தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் வட தமிழகத்தில் வரண்ட வானிலையே காணப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக சென்னை உட்பட சில வட மாவட்டங்களில் மாலை நேரங்களில் லேசான மழை பெய்து வருகிறது.

இதனால் வெப்பத்தின் தாக்கம் குறைவாக காணப்பட்டு இதமான சூழ்நிலை நிலவியது. இந்த நிலையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்துள்ளார். (3-8)

# ஜெயலலிதாவின் உடல் தோண்டப்படுமா? மர்மத்தில் மீண்டும் வெடிக்கும் சர்ச்சை



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் உள்ளதாக தொடுக்கப்பட்ட வழக்குகள் எதிர்வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் சென்னையைச் சேர்ந்த மியான் ஜான் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல மனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார்.

மேலும், ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் உள்ளது. எனவே அவரு..டைய உடலை மீண்டும் ..ண்டி எடுத்து பிரேத பரி..தனை செய்ய உத்தரவிடப்பட வேண்டும் எனவும் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மியான்ஜானின் மனுவினை ஆராய்ந்த இந்திரா பானர்ஜி மற்றும் எம்.சுந்தர் ஆகிய நீதிபதிகள் ஏற்கனவே உள்ள மூன்று வழக்குகளுடன் சேர்த்து ஒக்டோபர் 23 ஆம் திகதி இந்த வழக்கும் விசாரணை செய்யப்படும் என அறிவித்துள்ளனர்.

# எமது கோட்டையில் விரிசல் விழாதா என எதிரிகள் காத்திருக்கின்றனர்

## தொண்டர்களுக்கு சசிகலா கடிதம்



எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தொடர்பாக தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ள சசிகலா, எதிரிகள் எமது கோட்டையில் விரிசல் விழாதா? என எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் உள்ள சசிகலா அ.தி.மு.க தொண்டர்களுக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார். அதில், எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை நாடு போற்றும் வகையில் ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும் என தொண்டர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அக் கடிதத்தில், வீழ்ந்தே கிடக்கும் நம் எதிரிகள் எமது கோட்டையில் விரிசல் விழாதா என எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர். எமது கோட்டையில் விரிசல் விழாதா? தடி ஊன்றியாவது எழுந்து விட மாட்டோமா என எண்ணுகின்றனர்.

இந்தியாவில் 3ஆவது பெரிய இயக்கம் என்ற உயரத்தில் இருக்கும் இயக்கம் சிறிதளவும் கீழே இறங்கி விடக்கூடாது. முன்பை விட உறுதியாய் கழகத்தையும், தமிழகத்தையும் காக்க எம்.ஜி.ஆர்., நூற்றாண்டில் உறுதியேற்போம். ஜெயலலிதா இருந்திருந்தால் எவ்வாறு உணர்வோமோ, அதன் உணர்வை இனியும் உணரலாம்" என குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.க.வில் தினகரனுக்கும், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கும் இடையே மோதல் அதிகரித்துள்ள நிலையில் சசிகலாவின் கடிதம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (3-8)

# பயங்கர நிலச்சரிவு

## 8 பேர் பலி!

இமாச்சல பிரதேசத்தில் மாண்டி எனப்படும் பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் இதுவரை 8 பேர் பலியாகியுள்ளதோடு, பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என ...

மேலும், நிலச்சரிவில் சிக்குண்டு பலியானவர்களின் எண்ணிக்கை ஐம்பதையும் தாண்டலாம் என அஞ்சப்படுவதாக இமாச்சல் போக்குவரத்து அமைச்சர் ஜி.எஸ். பாலாஜி தெரிவித்துள்ளார்.

குறித்த நிலச்சரிவில் 2 பயணிகள் பேருந்துகள் 800 மீற்றர் பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக குறிப்பிடப்படுவதோடு மேலும் சில வாகனங்களும் சிக்குண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. அனர்த்த பிரதேசத்திற்கு விரைந்துள்ள தேசிய இடர் தீர்ப்புப் படையினரும், இராணுவத்தினரும் இணைந்து மீட்புப் பணிகளை தொடர்ந்துள்ளதாகவும், இதுவரை 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் பயங்கரம்

## குண்டுவெடிப்பில் 15 பேர் பலி!



பாகிஸ்தானில் இடம் பெற்றுள்ள குண்டுவெடிப்பில், சுமார் 15 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர்.

குவாட்டா நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது.

மிகவும் பரபரப்பாக மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்ட சந்தையொன்றுக்கு அருகில் இடம் பெற்ற இக் குண்டு வெடிப்பை அடுத்து, மக்கள் சிதறி ஓடியுள்ளனர்.

அத்துடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீப்பிடித்து எரிந்துள்ளன.

இந்நிலையில், நோயாளர்கள் காவு வண்டி உடனடியாக வரவழைக்கப்பட்ட நிலையில், காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ள பகுதியில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இக் குண்டுத் தாக்குதலுக்கு இதுவரையில் எவரும் உரிமை கோரவில்லை.

மேற்படி நகரில் ரோந்து சென்றிருந்த துணை இராணுவப் படையினரை இலக்கு வைத்து இக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பலூஸ்தான் மாகாண உள்துறை அமைச்சர் சப்ராஸ் வுகுடி தெரிவித்துள்ளார். (3-8)

## நேபாளத்தில் மண்சரிவு

### 36 பேர் பலி!

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக சுமார் 36 பேர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்த வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவில் சிக்கி காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கடும் இடி, மின்னலுடன் கூடிய அடை மழை பெய்து வருகின்றது. இந்நிலையில், அங்கு பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், மண்சரிவும் இடம் பெற்றுள்ளது. இதனால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். மேலும், பிராட்நகர் விமான நிலையம் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ள நிலையில், விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. (3-8)

## அமெரிக்கா, வட கொரியாவிற்கு

# கடிவாளமிடும் சீனா

(பீஜிங்)

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பதற்ற நிலைமை வலுப் பெற்றுவரும் நிலையில், தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் செயற்பாடுகளையும் தவிர்த்துக் கொண்டு, அமைதியைக் கடைப்பிடிக்குமாறு சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரியாவிடமும் அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமை காரணமாக தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் இரண்டு ஏவுகணைகளை கடந்த ஜூலை மாதம் வடகொரியா பரிசோதித்திருந்தது. இதிலிருந்து வட கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலைமை வலுப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-8)



உலகின் மிக வயதான மனிதர் என்ற கின்னஸ் சாதனை படைத்த இஸ்ரேல் நாட்டை சேர்ந்த கிரிஸ்டல் சமீபத்தில் மரணம் அடைந்துள்ளார்.




## இந்திய -சீன எல்லை விவகாரம்;

# முதிர்ந்த சக்தியாக செயற்படுகிறது இந்தியா

## அமெரிக்க இராணுவ நிபுணர் பாராட்டு

(வோஷிங்டன்)

"சிக்கிம் எல்லை விவகாரத்தில் இந்தியா நன்கு முதிர்ச்சியடைந்த சக்தியை போல் செயற்பட்டு வருகிறது" என்று அமெரிக்க ராணுவ நிபுணர் கூறியுள்ளார். டோக்லாமில் இருந்து படைகளை வாபஸ் பெறாவிட்டால், இந்தியா மீது தாக்குதல் நடத்தப் போவதாக சீனா கொக்கரித்து கொண்டிருக்கிறது. ஆத்திரமூட்டும் வகையில் கருத்துகளையும் கூறி வருகிறது. ஆனால் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் இந்தியா அமைதியாக இப் பிரச்சினையை கையாண்டு வருகிறது. நேற்று முன் தினம் சிக்கிம் முதல் அருணாச்சல பிரதேசம் வரையிலான சீன எல்லையில் 1,400 கி.மீ தூரத்துக்கு இந்திய ராணுவம் நிறுத்தப் பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த சீனாவும், எல்லைகளில் படைகளை குவித்து வருகிறது. இதனால், இருதரப்புக்கும் இடையிலான போர்ப்பதற்றம் மேலும் அதிகமாகி இருக்கிறது. இந்த விவகாரத்தை அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன.



இந்நிலையில், அமெரிக்காவின் புகழ்பெற்ற கடற்படை கல்லூரியின் பேராசிரியரும், சிறந்த இராணுவ நிபுணருமான ஜேம்ஸ் ஹோம்ஸ் அளித்த பேட்டி, சிக்கிம் மாநில எல்லையில் சீனாவுடன் ஏற்பட்டுள்ள மோதலில், இந்தியா இதுவரை மிகவும் முதிர்ச்சியடைந்த சக்தியைப்போல் நிதானமாக செயற்பட்டு வருகிறது. இது, சீனாவுக்கு ஆத்திரமூட்டி வருவதால், இளம் வாலிபனைபோல் வார்த்தைகளை வீசிக் கொண்டிருக்கிறது. அவற்றுக்கு இந்தியா மிகவும் பண்பான பதிலையே தந்து கொண்டிருக்கிறது. இப்பிரச்சினையில் இந்தியா இதுவரை மிகவும் சரியாகவே செயற்பட்டு கொண்டிருக்கிறது. கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை சீனா நிலை நாட்ட வேண்டும் என்றால், அதன் நில எல்லை பகுதிகளை பலப்படுத்தி கொள்ள வேண்டும். அதனால்தான், எல்லை வழியாக எந்த அண்டை நாடும் தன்னைத் தாக்க முடியாத அளவுக்கு பாதுகாப்பை பலப்படுத்த முயற்சிக்கிறது.

இவ்வாறு ஜேம்ஸ் ஹோம்ஸ் தெரிவித்தார்.

மேலும் 'இந்திய - சீன பிரச்சினையில் அமெரிக்கா இதுவரை தலையிடாமல் மௌனமாக இருப்பது ஏன்?' என்ற கேள்விக்கு, "இப்போதுள்ள அமெரிக்க நிர்வாகத்துக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. சிக்கிம் எல்லைப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடுவதை பிரதமர் மோடி விரும்பாமல் இருக்கலாம். இருப்பினும், பிரச்சினை அதிகமானால் இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா களமிறங்க வாய்ப்புள்ளது" என்று இராணுவ நிபுணரான ஹோம்ஸ் பதிலளித்தார். (3-8)

## சீனாவில் அடை மழை



(பீஜிங்)

சீனாவில் அடை மழையுடன் கூடிய கடும் காற்று வீசுவதால், அங்கு விமானப் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் தென் மற்றும் கிழக்கு மாகாணங்களில் காற்று மற்றும் இடியுடன் கூடிய அடை மழை தொடர்ந்து சில நாட்களுக்கு பெய்யும். இந்நிலையில், மலைப்பாங்கான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே, மக்களை அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அடை மழை காரணமாக அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மிகவும் பரபரப்பாகக் காணப்படும் பீஜிங்கிலுள்ள விமான நிலையத்தில் சுமார் 500 விமானப் போக்குவரத்துச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், 182 விமானங்கள் தாமதமாக தரையிறங்கியுள்ளன.

இந்நிலையில், விமானப் போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்திக் கொண்டு தங்களது பயணத்தை தொடருமாறு விமான நிலைய அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் படுகொலை புரிந்த கருணா மீது விசாரணை

## முதலமைச்சர் நஸீர் அஹமட் வலியுறுத்து




(கொழும்பு)

**கடந்த காலத்தில் கிழக்கில் இனப் படுகொலை புரிந்து முஸ்லிம் சமூகத்தை அழிக்க தலைமை தாங்கிய கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மீது நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.**

ஏறாவூரில் காட்டுப்பள்ளி மஸ்ஜிதுந் நூறுஸ் ஸலாமில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம காலத்தில் கருணா முஸ்லிம்களைப்பற்றி வெளியிடும் கருத்துக்கள் கருணா ஆயுதபலத்தோடு இருந்த காலத்தில் எவ்வாறு முஸ்லிம்கள் மீது இனப்படுகொலைகளைச் செய்திருப்பார் என்பதற்கு தக்க சான்றாக அமைந்துள்ளது.

கருணா முஸ்லிம் சமூகத்தையும் தமிழ் சமூகத்தையும் பிரிப்பதற்காக ஆயுத பலத்தோடு இருந்த போது பல திட்டங்களை வகுத்துச்செயற்பட்டார்.

முஸ்லிம் தமிழ் சமூக உறவைச் சீரழிக்க நினைக்கின்ற கருணா போன்ற துரோகிகளுக்கு காலம் தக்க பதிலளிக்கும். முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் இந்த நாட்டில் தன்னுடைய அரசியல் உரிமையைத் தக்க வைத்துக் கொள்ளும் என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம்" என முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கின் நிலைமைகளை ஆராய அஸ்கிரிய பீடாதிபதி யாழ்.வருகிறார்

## இராணுவத் தளபதி தகவல்



(கொழும்பு)

வடக்கின் நிலைமைகளை நேரில் ஆராய அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 28ஆம்திகதி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வடக்கிற்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர், கண்டியில் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க.

இதன்போது வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தி லேயே, வடக்கிற்குப் பயணம் மேற்கொள்ளுமாறு பெளத்த பீடங்களின் மகாநாயக்கர்களிடம், இராணுவத்தளபதி கோரிக்கை விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அஸ்கிரிய பீடா திபதி எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் வடக்கிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். (இ-7)

## ஐ.தே.கவின் பிரேரணையை எதிர்த்து

# விஜயதாஸவை காப்பாற்றுவேன் சு.க. அமைச்சர் டிலான் உறுதி



ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்தால், அதற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹாலிஎல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ரவி கருணாநாயக்க இராஜினாமா செய்தது போன்று இராஜினாமா செய்ய வேண்டிய பலர் கூட்டு எதிர்க் கட்சியிலும் உள்ளதாகவும் டிலான் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு கிடைத்துள்ள அதிக நிதியுதவி உலக வங்கியுடையது-நிதி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆகக்கூடுதலான நிதியுதவி உலக வங்கியினால் கிடைக்கப் பெற்றுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இதன் பெறுமதி 12 கோடி அமெரிக்க டொலர்கள் எனவும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வருடத்தில் முதன் நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 24 கோடியே 40 இலட்சம் அமெரிக்க டொலருக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 17 கோடியே 40 அமெரிக்க டொலர்கள் கடன் உடன்படிக்கையும் ஊடாகவும் எஞ்சியவை நேரடி முதலீடாகவும் கிடைத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நிதி உலகில் நிறையப் பாடங்கள்

நம்முடைய கஷ்டங்களில் பாதிக்கு மேற்பட்டவை பணத்தினால் வருகின்றன.

பணப் பிரச்சினையில் மட்டுமல்ல; குடும்பப் பிரச்சினைகளில் கூட அணுகி ஆராய்ந்து பார்த்தால் பணம்தான் பின்னிக் கிடக்கிறது.

உங்களுக்கு என்ன அத்தை வேணும்? நான் வாங்கித் தர்றேன் அத்தை! என்று ஒரு மருமகள் கேட்பாளேயானால் அந்த மருமகள்தான் சிறந்த மருமகள் என்கிறார் ஒரு மாமியார். தனக்குச் செலவு செய்கிற மகனையே அல்லது தன்னிடம் ஏதும் கேட்காத மகனையே ஒரு தாய்க்குப் பிடிக்கிறது.

இந்தப் பணத்தை மட்டும் ஒரு மனிதன் வென்றுவிட்டால் அவன் பாதிப் பிரச்சினைகளை வென்றுவிடுகிறான் என்று பொருள்.

ஆனால் அந்தப் பணத்தை அவன் சரிவரச் சம்பாதிக்காவிட்டாலோ அல்லது சம்பாதிப்பதைத் தொலைத்துவிட்டாலோ பிரச்சினைகள் நூறு சதவிகிதமாக ஆகிவிடுகின்றன. அதற்குப் பிறகு அவன் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பாதையும் பணமின்மை என்னும் முட்டுச் சுவரில் மோதி நின்றுவிடுவதைப் பார்க்கின்றோம்.

பணமே வாழ்க்கையாகிவிடாது என்கிற கட்சியைச் சேர்ந்தவன்தான் நானும். ஆன போதும் சிலர் உபதேசிக்கிற மாதிரி பணத்தை ஒரேயடியாக உதாசீனப்படுத்துவதற்கில்லை.

நன்கு சம்பாதிக்கிறவர்கள்கூட பண விடயத்தில் தவறான முடிவுகளை எடுப்பதன் மூலம் நிரந்தரக் கஷ்டங்களுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள்.

இது வளர்ச்சியைப் பாதிக்கிற ஒரு விடயம். ஒரு மனிதனை மூலையில் முடக்கிப் போட்டு விடுகிற விடயம்.

சக்திக்கு மீறிச் செலவு செய்கிறவர்கள் மாதாமாதம் துண்டு விழுகிற பட்ஜெட்டைப் போடுகிறவர்கள்; பெருகாத இடத்தில் பெருத்த முதலீடுகளைச் செய்துவிட்டுத் திணறுகிறவர்கள்; கண்டபடி வட்டிக்கு வாங்குகிறவர்கள்; தவறான நபர்களுக்குக் கடன் கொடுத்துவிட்டுத் திணறுகிறார்கள்; தாட்சண்யம் என்பது தனநாசம் என்பதை உணராமல் கண்டபடி வாரி இறைக்கிறவர்கள் என்று மனிதர்களில் பலரகத்தினரைப் பார்க்க முடிகிறது. இவர்களெல்லாம் தங்களுடைய சுபாவங்களை உடனே மாற்றிக் கொண்டாக வேண்டும்.

வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்தாலும் சரி, எவ்வளவு திறமை உடையவர்களாக இருந்தாலும் சரி, எத்தகைய பண்பாளர்கள் ஆனாலும் சரி, எவ்வளவு படித்திருந்தாலும் சரி, நிதி உலகில் அவர்கள் மேற்கூறிய எந்தத் தவறைச் செய்தாலும் அவர்கள் துவாரம் விழுந்த கப்பலுக்குச் சமம். இவர்கள் கரை சேர்வது கடினம்.

**லேனா தமிழ்வாணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமாகிறது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்து

HPV என்பது மனித பப்பிலோமாவைரஸ் என்பதற்கான ஆங்கிலப்பதத்தின் சுருக்கமாகும். பெரும்பாலான நோய்க்கிருமிகள் உடனடியான தொற்றுநோய்களையே ஏற்படுத்துகின்றன. அவற்றை தடுப்பு மருந்தேற்றல் மூலம்தடுக்கலாம். சில கிருமிகள் நாட்பட்ட தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக சில வைரஸ்கிருமிகளால் புற்றுநோய் ஏற்படுவதைக்குறிப்பிடலாம். வைரஸ் தொற்றுநோய்களில் 20வீதமானவை புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

HPVதடுப்பு மருந்தானது தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் புற்றுநோயொன்றைத் தடுப்பதற்கான இரண்டாவது சந்தர்ப்பமாக அமையவுள்ளது. ஹெப்பட்டைடிஸ் B எனும் வைரஸ் ஈரல்புற்றுநோய்க்கான பிரதான காரணியாகும். இதனைத் தடுப்பதற்கான HepB எனும்தடுப்பு மருந்தானது இலங்கையின் தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டத்தில் 2006 ஆம் ஆண்டில்சேர்க்கப்பட்டு (ஐங்கூட்டு வக்சீனில் இது உள்ளடங்குகிறது) குழந்தைக ஞ்க்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் எதிர்காலத்தில் வளர்ந்தவர்களில் ஈரல்புற்று நோயானது பெருமளவில் குறைக்கப்படும். அதேபோல் HPV மூலம் தடுப்பு மருந்தின் மூலம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுக்க முடியும்.

HPV என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய நூறுக்கும் மேற்பட்ட வைரஸ்களின் கூட்டமாகும். ஒவ்வொரு வைரஸ்க்கும் அதன் மரபு சார்வடிவத்தைக் குறிக்கும் (Genotype) இலக்கம ஒன்று வழங்கப்படும்.(உ+ம்: genotype16).இவ்வைரஸ் ஆனது சாதாரணமாக நோயொன்றுக்குரிய எவ்வித அறிகுறிகளையும் ஏற்படுத்தாமல் நீண்டகாலத்திற்கு எமது தோல் மற்றும் சீதமென்சவ்வுகளில் (வாய்க்குழி மற்றும் இனப்பெருக்கப் பாதை மென்சவ்வுகள்) தங்கக் கூடியது. சிலவேளைகளில் எவ்வித நோய்களையும் ஏற்படுத்தாமல் எம் உடலில் இருந்து முற்றாக அகன்றுவிடும். ஆனால் இவ்வைரஸின் சில மரபு சார்வடிவங்கள்(genotypes) மிகவும் ஆபத்தானவை. இவை உடனடியாக எவ்வித நோய்அறிகுறிகளையும் ஏற்படுத்தாவிட்டாலும் நீண்டகாலத்திற்கு மேற்குறிப்பிட்ட மேற்பரப்புகளில் தங்குவதால் அம்மேற்பரப்பிலுள்ள கலங்களின் இயல்புகளை மாற்றி விடுகின்றன.




இக்கலங்கள் நீண்டகாலப் போக்கில் புற்றுநோய்க் கலங்களாகவோ அல்லது புற்றுநோயல்லாத வளர்ச்சிகளாகவோ (உண்ணிகள்) மாற்றமடையலாம். HPV தொற்று ஏற்பட்டு அது மிகவும் முற்றிய கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாக மாறுவதற்கு 10 வருடங்கள் அல்லது அதை விடக்கூடிய காலம் எடுக்கலாம்.

HPV வைரஸானது கருப்பைக்கழுத்து, யோனி வழி போன்றவற்றிலிருந்து பஞ்சினால் சுரண்டி எடுக்கப்படும் கல மாதிரிகளில் HPV DNA பரிசோதனையை நடத்துவதன் மூலம் இனங்காணப்படக்கூடியது. மேற்படி கல மாதிரிகளை நுணுக்குக் காட்டியில் ஏற்றி, அவற்றில் வைரஸ் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை உறுதிப்படுத்துவதன் மூலமும் இதனை இனங்காணலாம்.

இப்பரிசோதனை "Pap பரிசோதனை" (Papani cola outest / Papsmear test) எனப்படும். HPV Genotype 16, 18 என்பனவே கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஏற்படுத்துகின்ற மிகவும் ஆபத்தான genotyope களாக இனங்காணப்பட்டுள்ளன. 99.7 வீதமான கருப்பைக் கழுத்துப்புற்றுநோய்கள்HPV வைரஸ் தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற அதே வேளை அவற்றில் 70வீதமானவை genotype 16, 18 என்பவற்றினால் ஏற்படுகின்றன. இவற்றுக்கான தடுப்பு மருந்துகள் தற்போது கிடைக்கின்றன.

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

ஒரு தடுக்கப்படக்கூடிய தொற்றாநோயாகும். பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 12 சதவீதம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாக உள்ளன. 30-55 வயதை உடைய பெண்களிலேயே இது அதிகம் இனங்காணப்படுவதுடன் உயர் இறப்பு வீதத்தையும் அதிக இயலாமையையும் ஏற் படுத்துகிறது. இவற்றில் 80வீதமானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படுகின்றன. உலகளாவிய ரீதியில்வருடாந்தம் 266,000 பெண்கள் இந்நோயினால் உயிரிழப்பதுடன் இவ் இறப்புகளில் 85 வீதமானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படுகின்றன. இம்மரணங்களைத் தடுப்பதற்கான உடனடிக் கவனம் எடுக்கப்படாவிடின், ஒழுங்குமுறையான கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்த் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிடின் எதிர்வரும் 10 ஆண்டுகளில் இவ் இறப்புக்களின் எண்ணிக்கை மேலும் 25 வீதத்தினால் அதிகரிக்கும் என்பது அதிர்ச்சிகரமான உண்மையாகும்.

இலங்கையில் 7.52 மில்லியன் பெண்கள் இந்நோய் ஏற்படக்கூடிய ஆபத்திலுள்ளதுடன் வருடாந்தம் 1395 புதிய நோயாளர்கள் இனங்காணப்படுவதோடு 814 பேர் மரணிக்கின்றனர் (சர்வதேச மதிப்பீட்டின்படி, IARC) தேசிய கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் தரவுகளின் படி வருடாந்தம் 850-950 புதிய கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 10 வீதமானவை கருப்பைக்கழுத்துப் புற்றுநோயாக உள்ளதுடன், இதுவே பெண்களில் 2 ஆவது அதிகூடியளவில் ஏற்படும் புற்றுநோயாகவும் உள்ளது.

இப் புற்றுநோயானது அண்ணளவாக 30 வயதிலுள்ள பெண்களில் ஆரம்பிக்கிறது. எனினும் 50-55 வயதிலுள்ள பெண்களை மிக அதிகம் தாக்குகிறது. கீழுள்ள தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டுப் புள்ளிவிபரம் சார்ந்த வரைபு இப்புற்றுநோயின் வயதுர்ந்த பரம்பலைக் காட்டுகிறது.

மூலம்: தேசிய புற்றுநோய்க்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்





**Figure 16: Age specific rates- Cervix uteri**

மூலம்: தேசியபுற்றுநோய்க்கட்டுப்பாட்டுநிகழ்ச்சித்திட்டம்

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்களில் பெரும்பாலானவை HPV வைரஸினால் ஏற்படுகின்றன. இதற்கான தடுப்பு மருந்து தற்போது கிடைக்கின்றது.

கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது இலங்கையில் பெண்களுக்கு மிகப்பெரிய சுமையை ஏற்படுத்துவதுடன் குடும்ப வாழ்வின் மிக முக்கியமான காலப்பகுதியில் அவர்களைப் பாதிக்கிறது.

### கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுத்தல்/ வருமுன் காத்தல்

மூன்றாம் நிலைத்தடுப்பு: கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின்படி நிலைகளுக்குச் சிகிச்சையளித்தல்.

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்கனவே அதன் குணங்குறிகளை வெளிக்காட்டிய நிலையில் அல்லது வேறு உடற்பாகங்களுக்குப் பரவிய நிலையில் இனங்காணப்பட்டால் மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்படும். நோயினால் ஏற்படக்கூடிய எல்லா பாதிப்புகளுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டாலும், இவர்களில் பெரும்பகுதியினர் மிகக் குறுகிய காலத்தினுள் இறந்து விடுவார்கள்.

பல குடும்பங்கள் மனைவியை அல்லது தாயை இழக்கும் நிலை ஏற்படுகிறது.

இவர்களுக்கான பரிசோதனைகள், சத்திர சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மருந்துகள் மற்றும் தொடர்ச்சியான சிகிச்சைகளுக்காக மிகப் பெருந் தொகையான பணம் சுகாதாரத்துறையினால் செலவிடப்படுகிறது. இத்தனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் நோயின் பாதிப்பினால் இறந்து விடுவது மிகவும் துன்பகரமானதாகும். இவ் இறப்புக்கள் HPV தடுப்பு மருந்து வழங்கல் மூலம் தவிர்க்கப்படக்கூடியவையாகும்.

இரண்டாம் நிலைத்தடுப்பு : கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கு முன்னான நிலைகளைப் பரிசோதனைகள் மூலம் இனங்கண்டு சிகிச்சை வழங்கல்

நீடித்த HPV வைரஸ் தொற்றானது கருப்பைக் கழுத்து, யோனிவழி போன்றவற்றிலிருந்து பஞ்சினால் சுரண்டி எடுக்கப்படும் கல மாதிரிகளில் தொடர்ச்சியான HPV DNA பரி சோதனையை நடத்துவதன்மூலம் இனங்காணப்படக்கூடியது. மேற்படி கல் மாதிரிகளை நுணுக்குக்காட்டியில் ஏற்றி, அவற்றில் வைரஸ் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை உறுதிப்படுத்துவதன் மூலமும் இதனை இனங்காணலாம். இப்பரி சோதனை "pap பரிசோதனை" (Papanicolaoutest / Papsmeartest) எனப்படும். இவ் இரண்டு முறைகளும்இப்புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைகளில் இனங்காண்பதற்காக பெரும்பாலான நாடுகளில் வழக்கத்திலுள்ளன. மேற்படி பரிசோதனைக்கான வளங்கள் குறைந்த சந்தர்ப்பங்களில் அசெற்றிக் அமிலத்தை/ லூகோல் அயடீன் எனும் திரவத்தை கருப்பைக் கழுத்தில் பிரயோகித்து அதில் ஏற்படும் நிறமாற்றத்தை வெற்றுக்கண்களால் அவதானிப்பதன் மூலமும் வைரஸ் தொற்றினை இனங்காணலாம்.

"Pap பரிசோதனை" கருப்பைக் கழுத்துப்புற்றுநோயை அதன்ஆரம்பநிலைகளிலே இனங்கண்டு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படும் மிகவும்வினைத்திறனான பரிசோதனையாகும். பெரும்பாலான நாடுகளில் வழக்கமான புற்றுநோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. 21 தொடக்கம் 65 வயது வரையான பெண்கள் 3-5 வருடங்களுக்கொரு முறை இப்பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் எனப்பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இப்பரிசோதனையானது கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைமுறையிலுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடத்தப்படும் சுகவனிதையர் சிகிச்சைநிலையத்தில்(WELL WOMEN CLINIC) 35அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்துபபண்களுக்கும் மேற்படி பரிசோதனைச் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. எனினும் பல்வேறு காரணங்களால் தற்போதும் இலங்கையில் பெரும் எண்ணிக்கையான பெண்கள் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் முற்றிய நிலையிலேயே இனங்காணப்படுகிறார்கள்.


முதலாம்நிலைத் தடுப்பு: தடுப்பு மருந் தேற்றலினால் **HPV** வைரஸின் **genotype 16,18** என்பன உடலினுள் புகுவதையும் நிலைத்திருப்பதையும் தடுப்பதன் மூலம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுத்தல்.

உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் HPV வைரஸ் தொற்றினால் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்று நோயைத் தடுப்பதற்காக இரண்டு வகையான வருமுன் காக்கும் தடுப்பு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று HPV Genotype 6,11,16,18 என்பவற்றை உள்ளடக்கிய நால் வலுத்தடுப்பூசி. மற்றையது HPV genotype 16,18 என்பவற்றை உள்ளடக்கிய இருவலுத்தடுப்பூசி. நால் வலுத்தடுப்பூசி 2006 இலும் இருவலுத்தடுப்பூசி 2007 இலும் அனுமதி வழங்கப்பட்டு பாவனைக்குவந்தன. இவைHPV வைரஸ் உடலினுள் உட்புகுவதற்கு முன்னர் வழங்கப்படவேண்டும் என்பதே இலக்காகும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் தொடர்பான அனுபவப்பகிர்வு



தேசிய ஒன்றிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் நான்கு உயர்மட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு நல்லிணக்க உபாயங்கள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பான அனுபவங்களை விசேடமாக வட அயர்லாந்து அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவால் தலைமை தாங்கப்படுகின்ற பாராளுமன்ற துறைசார் கண்காணிப்பு குழு மற்றும் ஜனநாயகத்திற்கான வெஸ்மினிஸ்டர் பவுண்டேசன் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய இராஜ்ஜியத்தின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் வேறுபட்ட கட்சிகளை பிரதிநிதிப்படுத்துவதுடன் நல்லிணக்கம், சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட மறுசீரமைப்புகள் பற்றிய தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு, அதிகாரப்பரவலாக்கம், காணி சம்பந்தமான பிரச்சினைகள், இழப்பீடுகள் வழங்கல், காணாமல் போனோர் பிரச்சினைகள்,மீள்குடியேற்றம், சமூக காவல்துறை, நீதித்துறை மறுசீரமைப்பு, கணக்கீட்டு கடப்பாடு, பொருளாதார மறுசீரமைப்பு, கல்வி மற்றும் திறன் விருத்தி, நினைவுகூரல், உண்மையைக் கண்டறிதல் போன்றவை தொடர்பாக தமது கருத்துக்களை பரிமாறினர். பாராளுமன்ற உறுப்பினர்கள் வட அயர்லாந்தின் நல்லிணக்கத்தைப் பற்றி குறிப்பிடுகையில் பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்தினர்.

1.வட அயர்லாந்து ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் உடன் இருந்த போது அயர்லாந்து குடியரசு (வட அயர்லாந்து தவிர்ந்து) ஒரு தனியான நாடாக ஐக்கிய இராஜ்ஜியத்துடன் தொடர்பற்ற வகையில் காணப்பட்டது.

2.வட அயர்லாந்திலுள்ள ஐரிஸ் மக்கள் பெரும்பாலானோர் கத்தோலிக்க மதத்தவராக காணப்பட்ட போது எஞ்சிய மக்கள் இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்திலிருந்து வந்த புரட்டஸ்தான வரலாற்று பின்னணியுடன் காணப்பட்டனர்.

3.கத்தோலிக்க மக்கள் பொருளாதார, சமூக ரீதியாக பின்னடைவுடன் காணப்பட்டதுடன் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வேறுபடுத்தப்பட்டவர்களாக அடக்கப்பட்ட சமூகமாக காணப்பட்டதால் இரு பிரிவினருக்குமிடையில் முரண்பாடுகள் உச்சமட்டத்தை அடைந்ததுடன் பல குழப்பங்களும் ஏற்பட்ட காரணத்தால் வட அயர்லாந்து கத்தோலிக்கர்கள் அயர்லாந்து குடியரசுடன் இணைய வேண்டுமென்ற கோரிக்கையினை முன்வைத்தனர். மாறாக புரட்டஸ்தான மதம் சார்ந்தவர்கள் வட அயர்லாந்து, இங்கிலாந்துடன் இணைந்து இருக்க வேண்டுமென்ற கருத்தினை முன்வைத்தனர். இக்குழப்பங்கள் காரணமாக தீவிரவாதம், அமைதியின்மை, தீ வைப்புக்கள் இடம்பெறலாயின.

4.பெரிய வெள்ளிதின ஒப்பந்தம் 1999 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டதுடன் சமாதானம், ஒருமைப்பாடு நல்லிணக்கத்திற்கான ஒரு முன்னெடுப்பாக நோக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் வட அயர்லாந்திற்கான அதிகார பரவலாக்கம் முன்னெடுக்கப்பட்டதுடன் வட அயர்லாந்தின் தேசிய பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய மந்திரிசபை உருவாக்கப்பட்டு பிரித்தானியாவின் அதிகாரம் வட அயர்லாந்து பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டு சிறுபான்மை கத்தோலிக்கர்களின் அரசியல் அதிகாரம் சக்திப்படுத் தப்பட்டதன் மூலம் சமாதானம், நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு வட அயர் லாந்து தொடர்ந்தும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரிவுபடாத ஒரு கட்டமைப்பாக நிலைமாற்றப்பட் டது.

5.அத்துடன் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டு, வட அயர்லாந்தின் உத்தியோகபூர்வமற்ற இராணுவம் (IRA) யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு பல கட்சி கலந்துரையாடல்கள் மூலம் சமாதானம் முன்வைக்கப்பட்டது.

6.பிரித்தானிய அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தை வட அயர்லாந்திற்கு பரவலாக்கியதன் மூலம் காவல்துறை, நீதித்துறை, நீதிமன்றங்கள் உட்பட அதிகாரங்கள் வட அயர்லாந்திற்கு பரவலாக்கப்பட்டு நல்லிணக்கம், சமாதானத்திற்கான ஒரு பயணம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க உபாயங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியால் விளக்கப்பட்டது. தேசிய நல்லிணக்க கொள்கை, இடம் பெயர்ந்தவர்களுக்கான நிரந்தர தீர்வுகளுக்கான தேசிய கொள்கை, நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்க நட்புறவு பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், நல்லிணக்க நட்புறவு ஊடகம் மற்றும் சமாதான ஊடகத்துறை மற்றும் இடம் பெயர்ந்தவர்கள், தாயகம் திரும்பும் அகதிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஆகியோருக்கான நல்லிணக்கத்தை நோக்கமாக கொண்ட பொருளாதார வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், மதம் மற்றும் இனங்களுக்கிடையே ஏற்படும் குழப்பங்களை குறைப்பதற்கான மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுக்கள் என்பவற்றை குறிப்பாகச் சொல்லலாம்.

மேலும் ஆற்றுப்படுத்துகை, இழப்பீடு வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடுகள், நீர் விநியோகம், மலசலகூடங்கள், பாடசாலை மற்றும் சுகாதார முதலீடுகள், பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளான வீதிகள், பாலங்கள், இறங்கு துறைகள் போக்குவரத்து வசதிகள் என்பனவும் செய்து கொடுக்கப்படுவதாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

# அறிமுகமாகிறது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்து

(15 ஆம்பக்கத்தொடர்ச்சி...)

2014 ஆம்ஆண்டளவில் உலகிலுள்ள 58 நாடுகள் (30%) தமது தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டத்தில் பெண் பிள்ளைகளுக்கான HPV தடுப்பூசியை அறிமுகப்படுத்தியிருந்தன. கடந்த 2-3 வருடங்களில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அடங்கலாக மேலும் பலநாடுகள் இத் தடுப்பூசியை அறிமுகம் செய்துள்ளன. இலங்கை அமைந்துள்ள தென்கிழக்காசிய வலயத்தில் பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இந்தியா (சில மாநிலங்கள்) ஆகிய நாடுகள் ஏற்கனவே இத்தடுப்பூசியைப் பயன்படுத்துகின்றன. தாய்லாந்து, மியன்மார் ஆகிய நாடுகள் விரைவில் இத்தடுப்பூசியை அறிமுகம்செய்யவுளளன.

இலங்கையின் சுகாதார அமைச்சின் கீழுள்ள நோய்த் தொற்றியல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் 2017 ஜூலை மாதம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான நால்வலுவுள்ள HPV தடுப்பூசி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஏற்படுத்தும் HPV வைரஸ் Genotype களான 16,18 என்பவற்றைத் தடுப்பதன் மூலம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுக்கின்றது. அத்துடன் Genotype 6,11 என் பவற்றை எதிர்ப்பதன்மூலம் இனப்பெருக்க உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோயல்லாத உண் ணிகளையும் தடுக்கிறது என்பது மேலதிக நன்மையாகும்.

தடுப்பு மருந்தேற்றலின் பாதுகாப்புத் தன்மை தொடர்பான உலகளாவிய ஆலோசனைக் குழுவானது உலக நாடுகளின் தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதுடன், HPV தடுப்பூசியின் பாதுகாப்புத் தன்மை தொடர்பான பல்வேறு நாடுகளின் தரவுகளைத் துல்லியமாக ஆராய்ந்து இத்தடுப்பூசி மிகவும் பாதுகாப்பான தொன்று என 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்டஅறிக்கையொன்றில் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் தனியார் வைத்தியசாலைகளில் இத் தடுப்பூசி 2010 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்து வருகின்றது (இருவலுத்தடுப்பூசி 2010 இலும் நால்வலுத்தடுப்பூசி 2012 இலும் பதிவு செய்யப்பட்டன). எனினும் ருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான HPV நால்வலுத்தடுப்பூசியானது 2017 ஆம்ஆண்டிலிருந்து அனைத்து பெண் சிறார்களுக்கும் இலவசமாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

*தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின்கீழ் 2017 ஆம் ஆண்டிலிருந்து கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான HPV தடுப்பூசி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

*இது பாடசாலை அடிப்படையிலான தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ்வழங்கப்படும்.

*10 வயது பூர்த்தியடைந்த தரம்6 இலுள்ள எல்லாப் பெண் பிள்ளைகளுக்கும் இத்தடுப்பூசி வழங்கப்படும்.

* HPV Genotype 16, 18 என்பவற்றால் ஏற்படும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத்தடுப்பதற்கு இத் தடுப்பூசியானது 2தடவைகள் வழங்கப்படவேண்டும்.

* இருதடவைகளுக்குமான ஆகக்குறைந்த இடைவெளி 6 மாதங்கள் இருத்தல் அவசியம்.

*இதனைப் பாடசாலையில் பெறத் தவறும்பட்சத்தில் குறித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

* இத்தடுப்பூசி பாடசாலையில் வழமையாக வழங்கப்படும் atd தடுப்பூசியுடன் சேர்த்து வழங்கப்படக் கூடியது.

* HPV தடுப்பூசி பாதுகாப்பானது ஊசி ஏற்றப்படும் இடத்தில் வலி, தோலில் மெல்லிய சிவப்புத்தன்மை போன்ற மிகச்சிறிய பக்க விளைவுகள் ஏற்படலாம். பாரதூரமான பக்க விளைவுகளுக்கான வாய்ப்பு மிக மிகக் குறைவாகும்.

எனி னும் சுகாதாரத் துறையினர் இதற்கான சகல முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன் உடனடியாக சிகிச்சை வழங்கவும் ஆயத்தமாக இருப்பர்.

*கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தடுக்கப்படக்கூடியது. மிகவும் பாதுகாப்பான, வினைத்திறனான HPV தடுப்பூசி 70% ஆன கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்களைத் தடுக்கக்கூடியது. இத்தடுப்பூசி தரம் ஆறிலுள்ள சிறுமிகளுக்கு வழங்கப்படும். அவர்கள்35வயதிலிருந்து "Pap பரிசோதனை" யை மேற்கொள்ளுதல்வேண் டும்.

**வைத்தியகலாநிதி
கோ.றஜீவ்**
பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி,
யாழ்ப்பாணம்.

# மாலபே கல்லூரியின் பணிப்பாளர் சபை நியமனங்கள் தொடர்பில் முறைப்பாடு

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் பணிப்பாளர் சபை நியமனங்கள் குறித்து ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாலபே மருத்துவக் கல்லூரியின் பணிப்பாளர் சபையில் சாதாரண சமூகத்திற்கான மக்கள் முன்னணியின் தலைவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சரத் விஜேயசூரிய உள்ளிட்ட ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையில் அது குறித்து இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை போலியானது எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

# மகிந்த கட்சி தாவல்

## பீரிஸ் தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைய தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியதாக ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர்கள் அடுத்த மாதம் தமது கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொள்வார்கள் என்றும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அதில் உள்ளடங்குவார் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் உத்தியோகபூர்வமற்ற பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் புதிய கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டால், அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் கேள்வி எழக்கூடும்.



எனவே, அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மேற்கொள்ளும் என்றும் அதன் தலைவர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் அடுத்த தேர்தலில் களமிறங்க எதிர்பார்ப்பதாகவும் பீரிஸ் கூறியுள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்ப்பது புதிய கட்சியின் எண்ணம் இல்லை என்றும், அதை பலவீனப்படுத்துவதே நோக்கம் என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணை முறி மோசடி குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகத் தயார்-அஜித் நிவாட் அறிவிப்பு



(கொழும்பு)

பிணை முறி மோசடி குறித்த ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகத் தயார் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அணைக்குழு என்ன விடயம் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அது பற்றி விளக்கம் அளிக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வீடு புகுந்து துப்பாக்கிச் சூடு

பத்தேகம - கொடவத்த தெற்கு பிரதேசத்தில் வீடு ஒன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பத்தேகம நீதவான் நீதிமன்றின் அருகிலுள்ள வீட்டிலே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டினை மேற்கொள்வதற்கு வந்த நபர் கதவை உடைத்து வீட்டிற்குள் சென்று, வீட்டில் நித்திரையிலிருந்த நபரை சுட்டுவிட்டு, தப்பிச் செல்வதற்கு முயன்றுள்ளார்.

இதன்போது, துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபர் மற்றும் அவரது மனைவி, துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்ட நபருடன் சண்டையிட்டுள்ளனர்.

இதனையடுத்து, துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபரின் மனைவி குறித்த நபர் மீது, பொருள் ஒன்றினால் தாக்கியுள்ளார்.

இதனால் குறித்த நபர் படுகாயமடைந்துள்ளார். எனினும் காயமடைந்த சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் முன்னர் கடற்படையில் பணிபுரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கைப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய குறித்த நபர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து பத்தேகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, துப்பாக்கி சூட்டினை மேற்கொண்ட சந்தேக நபர் தொலைபேசி மற்றும் துப்பாக்கியை விட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தென்னிலங்கை அதிவேக பாதையில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து

(கொழும்பு)

தென்னிலங்கையின் அதிவேகப் பாதையில் ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதிவேகப் பாதை, கொட்டாவைப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பகுதியில் இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஏற்பட்டுள்ளது.

கார், வான், பேருந்து மற்றும் இரண்டு கப் வண்டிகளே இவ்வாறு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தின் காரணமாக இருவர் காயமடைந்த நிலையில் அதிவேகப் பாதை ரோந்துப் பொலிஸாரின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தின் காரணமாக அதிவேகப் பாதையின் தென்னிலங்கை நோக்கிய வழிப்பாதையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (இ-7)

# சு.க. அமைப்பாளர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை செயற்படுத்தாத சகல தொகுதி அமைப்பாளர்களும் தங்களது பதவிகளை இழக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சவால்களுக்கு முகம்கொடுக்கத் தெரிந்த, கட்சிக்காக கடுமையாக உழைத்த கட்சி உறுப்பினர்கள் புதிய தொகுதி அமைப்பாளர்களாகத் தெரிவு செய்யப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர்களின் மனைவிமார் தொடர்பிலும் முறைப்பாடுகள்

அமைச்சர்களின் மனைவிமார் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் மனைவியர், பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள் கொழும்பை மையமாகக் கொண்டு மேற்கொண்ட ஊழல் மோசடிகள், சொத்துக் கொள்வனவுகள் தொடர்பில் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு இது குறித்த உண்மைகள் அம்பலப்படுத்தப்படும் என ஆணைக்குழுவினர் தெரிவத்துள்ளார். (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1162

Search for people, places and things Nagendram Home

### பிரியா




### சியா



ஒரு கவிதை சொல் என்றாள்.
அவள் பெயர். சொன்னேன்.
அவள் முகத்தில்
வெட்கம் வந்தது.
இன்னுமோர் கவிதை
சொல் என்றாள்.
அவள் தங்கச்சி
பெயர் சொன்னேன்.
என் மூக்கில் இரத்தம் வந்தது.
என்னா அடி!

### சுபா



### சிநேகா

நீங்க வீர விளையாட்டு விளையாடுவீங்களா?



சில சமயம் மனைவியை எதிர்த்து பேசுவேன்

### பூமிகா




அதுதான் காதல்

### தனு

வெயில் காலத்துல மோர் பந்தல்
வைக்குற மாதிரி



குளிர் காலத்துல டீ பந்தல்
வைச்சா குறைஞ்சா போயிருவீங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## ரௌடி



காயத்ரி ரகுராம் தான் பிக்போஸ் வீட்டின் வில்லி கரக்டர் என நிகழ்ச்சியில் ரசிகர்கள் கூறிவரும் நிலையில், அவர் நான் ரௌடியாக மாறிவிடுவேன் என கூறி பரபரப்பு ஏற்படுத்தியுள்ளார்.

இந்த வாரம் பிக்போஸ் வீட்டில் இருந்து ஒருவேளை சக்தி வெளியேற்றப்பட்டால் நான் தனியாக மாட்டிக் கொள்வேன். நான் ரௌடியாக மாறிவிடுவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வார எவிக்ஷன் பட்டியலில் இருந்த காயத்ரியை பிக்போஸ் ஏற்கனவே காப்பாற்றிவிட்டது குறிப்பிடத்தக்கது.

## ஓவியாவிடம் விசாரணை




ஓவியா பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியது அனைவரும் அறிந்ததே. அவர் தற்போது ஒரு சில படங்களில் நடித்து வருகின்றார்.

இந்நிலையில் இவர் பிக்போஸ் வீட்டிலிருந்து காதல் தோல்வி காரணமாக மிகவும் மன அழுத்தத்திற்கு ஆளானார். இதனால், உடனே அந்த வீட்டிலிருந்து வெளியேறி சிகிச்சை எடுத்து வருகின்றார்.

ஆனால், அந்த வீட்டிலிருந்து அவர் வெளியேற தற்கொலை முயற்சி எடுத்துக்கொண்டார். அது அனைவரையும் அதிர்ச்சியாக்கியது. அதைத் தொடர்ந்து தற்போது ஓவியாவை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து இதுகுறித்து விசாரணை நடந்துள்ளதாம்.

## திரும்பி வந்திட்டேன்னு சொல்லு




ஒவ்வொரு வாரமும் ரசிகர்கள் எதிர்பார்ப்பது வார இறுதியில் வரும் கமலின் அதிரடியைத்தான். மக்களின் சந்தேகங்களை அதிரடியான கேள்விகள் மூலம் தீர்த்து வைப்பார். மேலும் ஒருபடி மேலாக பிக்போஸ் பற்றி தொடர்ந்து கருத்து தெரிவித்து வரும் ஸ்ரீரியா, சதீஷ் இருவரையும் அழைத்து பேசியுள்ளார்.

இதில் ஸ்ரீப்ரியா கமலிடம் ஏன் காயத்ரியை திடீரென்று காப்பாற்றியுள்ளீர்கள் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு கமல் இந்த கேள்விக்கு எனக்கும் விடை தெரிய வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

உடனே பிக்போஸ் ஒவ்வொரு வாரமும் நடக்கும் நோமினேஷன் வழிமுறீறகளை பங்கேற்பாளர்கள் சரியாக எடுத்துக்கொள்ளாமல் இந்த வாரம் விளையாட்டுத்தனமாக இருந்தனர். வேறு வழியில்லாமல் எல்லாரையுமே இந்த வாரம் பிகபோஸ் நோமினேஷன் லிஸ்டில் எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவானது.

இந்த கேம் ஒரு இன்டர்நஷனல் போர்மட் ஷோ, இந்த விளையாட்டில் சில விசித்திரமான விதிமுறைகள் உள்ளன, அதாவது மக்களே ஓட்டுப்போட்டு வெளியேற்றிய பங்கேற்பாளர்கள் கூட மீண்டும் திரும்பவரலாம், அதே போல் மக்களுக்கு பிடித்த பங்கேற்பாளர்கள் கூட மீண்டும் திரும்ப வரலாம் என்று விளக்கமளித்தார். இதன் மூலம் மீண்டும் ஓவியா திரும்ப வாய்ப்பு உள்ளது என்று எண்ணி ரசிகர்கள் கரகோஷத்தை எழுப்பினர்.

## என்முகம் அதுவல்ல

பிக்போஸ் நிகழ்ச்சியின் போட்டியாளர்களில் ஜூலி தான் ரசிகர்களால் மிகவும் வெறுக்கப்பட்டவர் என சொல்லலாம். ஜல்லிக்கட்டு போராட்டத்தின் மூலம் பிரபலமான அவரை முதலில் ரசிகர்கள் ஆதரித்தாலும், ஒரேவாரத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அனைவரும் ஓவியாவுக்கு ஆதரவாக பேச தொடங்கிவிட்டனர்.

பிக்போஸில் இருந்து ஜூலி ஏற்கனவே வெளியேற்றப்பட்டுவிட்ட நிலையில், அவர் தன் முகநூல் பக்கத்தில் இந்த ஷோ பற்றி ஒரு கருத்தை பதிவிட்டுள்ளார். வெளியுலகத்தில் நான் எப்படி நடந்துகொள்கிறேன் என்பது தான் என் உண்மையான கரக்டர், ஷோவில் நான் எப்படி நடந்துகொண்டேன் என்பதல்ல என தெரிவித்துள் [illegible] உண்மையான முகம் இல்லை என அவர் [illegible] தெரிகிறது.

## வழக்கு




பிக்போஸ் நிகழ்ச்சியை குடும்பத்தினருடன் பார்க்க முடியாத அளவுக்கு ஆபாசமாக இருப்பதாக கூறி அதற்கு தடை விதிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பிக்போஸ் போன்ற நிகழ்ச்சிகளை யார் கண்காணிப்பது என்பது தொடர்பாக, ஒரு வாரத்திற்குள் மத்திய அரசு விளக்கமளிக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கட்டிப்பிடி வைத்தியம்



பிக்போஸ் நிகழ்ச்சியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் இருக்கிறார்கள். ஒன்றாக ஒரு குடும்பமாக இருந்தாலும் அவர்களுக்குள் சில கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் என தொடர்ந்து போய் கொண்டிருக்கிறது.

நிகழ்ச்சியில் எதிர்ப்பை சந்திக்காமலே நெட்டிசன்களின் மீம்ஸ்க்கு ஆளானவர் கவிஞர் சினேகன். இவர் பலருக்கு நண்பனாக இருந்தாலும் கட்டிப்பிடிப்பதை விடவில்லை.

அதிலும் நமீதா, ஜூலி, அனுயா என அவர் கட்டிப்பிடித்தது கேலி கிண்டலானது. தற்போது காமெடி நடிகர் சதீஷ் இது குறித்து கமலிடமே கேட்டுவிட்டார். கமலும் உடனே எழுந்து நிற்க சதீஷ் அவரை கட்டிப்பிடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகமாக சிந்திக்கத் தூண்டும் வருங்கால பின்னறிவு

## தொழில் ரகசியம்

நினைத்தது நடக்காமல் போனால் போகட்டும் என்று ஒதுக்கி விடலாம். திட்டமிட்டது நடக்காமல் தோல்வியடைந்தால் தலையை முத்து என்று விட்டுவிடலாம். அடைந்த தோல்வியைத் துறந்து, விழுந்த குழியிலிருந்து எழுந்து, வாங்கிய வசவைக் கூட மறந்து விடலாம். ஆனால் தோல்விக்கு காரணம் கேவலம் ஒரு சின்ன தவறு என்று தெரியும் போது, சில்லறைக் காரணத்துக்கு என்று புரியும் போது, சுலபமாகத் தவிர்த்திருக்கலாம் என்று அறியும் போது வலிக்கிறது. இது எப்படித் தோண்றாமல் போச்சு', 'கண் முன்னால் இருந்ததை எப்படி கவனிக்காமல் விட்டோம்' என்று வயிறெரிகிறது.

நடந்தபின் தெரியும் பின்னறிவை ஆங்கிலத்தில் Hindsight என்பார்கள். ஒரு விடயம் நடந்த பின் அதன் காரணம் தெரிகிறது. முன்னேயே தெரிந்திருந்தால் சரியாய் செய்து தோல்வியைத் தவிர்த்திருக்கலாம்




ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

என்பது பின்னறிவு. போஸ்ட் மோர்ட்டம் செய்து இறந்த காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இறக்கப் போவதன் காரணத்தை முன்பே அறிந்துகொண்டு இறப்பை தவிர்க்க முடியுமா?

ப்ரீமார்ட்டம்' (Premortem) செய்தால் முடியும் என்கிறார் 'கேரிக் ளைன்' என்ற ஆராய்ச்சி உளவியலாளர். இவர் கூறுவது புரிவதற்கு 1989ல் நடந்த ஆய்வு ஒன்றை விளக்குவது அவசியமாகிறது.


ஆய்வை செய்தவர்கள் 'டெபரா மிஷல்', 'எட்வர்ட் ரஸ்ஸோ' மற்றும் 'நான்சி பெனிங்டன்' என்ற பேராசிரியர்கள். நடந்து முடியாத செயலை முடிந்து விட்டது என்று கற்பனை செய்து அதெப்படி முடிந்திருக்கும் என்ன நடந்திருக்கும், என்ன காரணங்களால் அப்படி நடந்திருக்கும் என்று முன்கூட்டியே அனுமானிக்கும் போது சரியான காரணங்களை தெரிந்து கொள்ளும் சாத்தியக்கூறு முப்பது சதவீதம் அதிகரிக்கிறது என்று கண்டுபிடித்தனர். திட்டமிடும் விடயம் முடிந்துவிட்டது என்று பாவித்து என்ன நடந்திருக்கும், எப்படி நடந்திருக்கும், எதனால் நடந்திருக்கும்என்று கண்டறிவதை 'வருங்கால பின்னறிவு' (Prospective hindsight) என்றனர். ஆய்வு முடிவுகளை 'Journal of Behavioural Decision Making'ல் கட்டுரையாக எழுதினர். கட்டுரையின் அழகான தலைப்பு 'Back to the future' - மீண்டும் வருங்காலத்திற்கு!

வருங்கால பின்னறிவை அடிப்படையாக வைத்து கேரி க்ளைன் கூறிய கோட்பாடு தான் ப்ரீமார்ட்டம். போஸ்ட் மார்ட்டம் செய்து இறந்த காரணம் தெரியும் போது இறந்தவர் குடும்பம், டாக்டர், பொலிஸ் என்று அனைவருக்கும் பயன் உண்டு. இறந்தவரைத் தவிர! தொழில் சார்ந்த சூழ்நிலையில் ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் முன் ப்ரீமார்ட்டம் செய்யும் போது சரியாக அனுமானித்து அது சரியாக செய்யப்பட்டு தோல்வியடைந்து போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டிய நிலை வராமல் தடுக்கிறது.

தோல்வியடையும் செயற்றிட்ட பின்னாய்வுக் கூட்டத்தில் பெரும்பாலும் 'என்ன நடந்து தொலைத்தது? ஏன் தோல்வி என்று தான் கேட்கப்படுகிறது. ஆனால் ப்ரீமோர்ட்டம் என்பது டாக்டரிடம் 'நோயாளி போய்விட்டார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். என்ன ஆனது, எப்படி இறந்தார் என்று கூறுங்கள்' என்று கூறுவது போல. அதே போல் செயற்றிட்டம் தொடங்கும் முன் ஊழியர்களிடம் இப்பொழுது நாம் வருங்காலத்தில் இருப்பதாக கற்பனை செய்யுங்கள். இந்த செயற்றிட்டம் தோல்வியில் முடிந்து விட்டது என்று நினைத்துக்கொள்ளுங்கள். எதனால் தோல்வியடைந்தது என்று கூறுங்கள் எனும்போது செயற்றிட்டம் தோல்வியில் முடிய நேரிடும் காரணங்கள் முன்பே தெரியும்.

வியாபாரத்தில் செயற்றிட்டங்கள் தோல்வியில் முடிவது அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் செயற்றிட்டங்களை திட்டமிடும் குழுவிலுள்ள அனைவரும் தங்கள் சந்தேகங்கள், நம்பிக்கையின்மைகளை அனைவரிடமும் கூற தயங்குகின்றனர். திட்டமிடுதலில் உள்ள தவறுகளை கூறினால் தங்களை கழிந்துகொள்வார்களோ என்று தயங்கி கூறாமல் விட்டுவிடுகின்றனர். திட்டமிடும் போதே அனைவரையும் இயல்பாக மனம் திறந்து பேச வைத்தால் மட்டுமே செயற்றிட்டங்கள் பிழைக்க முடியும். இதற்கு உதவுகிறது ப்ரீமோர்ட்டம். திட்டமிட்டு முடித்தபின் செயற்றிட்டத் தலைவர் தன் அணியினரிடம் 'நாம் நினைத்தபடி நடக்காமல் தோல்வியில் முடிந்து விட்டது என்று நினைத்துக் கொள்ளுங்கள். எதனால் தோல்வியடைந்திருக்கும், எங்கு தவறுகள் நடந்தன என்பதை ஒரு தாளில் எழுதுங்கள்' என்று கூறவேண்டும். இப்படி கூறும்போது அணியினரும் திட்டமிடும் போது தங்கள் மனதில் தவறென்று நினைத்து அதை கூறத் தயங்கிய விடயங்களை தயங்காமல் எழுதுவார்கள்.

திட்டமிட்டு நடந்து செயற்றிட்டம் தோல்வியடைந்து எல்லோரிடமும் திட்டு வாங்கி போஸ்ட் மோர்ட்டம் செய்யப்படுவதை விட திட்டமிடும்



போதே அதிலுள்ள தவறுகளை கண்டு பிடித்து தெளிவாய் திட்டமிட்டு திறனாக செயற்றிட்டங்கள் நிறைவேற்ற உதவும் கோட்பாடுதான் ப்ரீமார்ட்டம்.

பின்னறிவு நல்ல விடயம்தான். ஆனால் வருங்கால பின்னறிவு இன்னமும் சிறந்தது இல்லையா? உங்களிடம் ஒரு கேள்வி. 5 வருடங்களில் உங்கள் பிராண்ட் இலங்கையில் முன்னணியில் வருவதற்கான சாத்தியக்கூறு என்ன? எந்த காரணங்களால் அப்படி நடக்கும் என்று நினைக்கிறீர்கள்? இப்படி கேட்கும் போது உங்களால் ஒரு பாணியில் விடையளிக்க முடியும். இதே கேள்வியை சற்றே மாற்றிக் கேட்கிறேன். நாம் இப்பொழுது ஐந்து வருடங்கள் கழித்து அந்த வருங்காலத்தில் இருக்கிறோம். ஒரு பெரிய விடயம் நடந்திருக்கிறது. உங்கள் பிராண்ட் இலங்கையில் முன்னணி நிலையை அடைந்திருக்கிறது. எந்த காரணங்களால் இது நடந்தது என்று கூறுங்கள்.

2 கேள்வியும் ஒன்றுபோல் தோன்றினாலும் இரண்டாவது கேள்விக்கு விடை கூற உணர்வுபூர்வமாய் சிந்திக்கவேண்டியிருக்கும் என்பதை கவனித்தீர்களா? வருங்கால பின்னறிவோடும் சிந்திக்க வேண்டியிருப்பதாலும் வருங்கா லத்திலிருந்து பின்னோக்கிப் பார் த்து பதில் கூறவேண்டியிருப்பதா லும் என்ன நடந்திருக்கும் என்று காரணங்களை கண்டுபிடிப்பது எளிதாகிறது.

டெபரா மிஷல் செய்த ஆய்வில் இன்னொரு கேள்வி கேட்கப்பட்டது. கம்பனியில் புதிதாய் சேர்ந்த ஒரு ஊழியரின் பணிகள் விவரமாக கூறப்பட்டு அவர் ஆறு மாதத்தில் தன் வேலையை ராஜினாமா செய்கிறார். என்ன காரணங்களுக்காக அவர் வேலை விடுகிறார் என்று கூறுங்கள் என்று கேட்கப்பட்டது. கேட்கப்பட்டவர்கள் சராசரியாக 3.5 காரணங்கள் கூறினர். அதே கேள்வி இன்னொரு குழுவினரிடம் வருங்கால பின்னறிவு வகையில் கேட்கப்பட்டது. 6 மாதம் கழிந்து விட்டது, நாம் வருங்காலத்தில் இருக்கிறோம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அந்த ஊழியர் ஏன் வேலையை ராஜினாமா செய்திருக்கிறார் என்று கூறுங்கள். இப்படி கேட்கப்பட்டவர்கள் சராசரியாக 4.4 காரணங்களை கூறினர். இவர்கள் பதில்கள் முந்தைய குழுவினரை விட ஏற்புடையதாக, தெளிவாக இருந்தன!

வருங்கால பின்னறிவு நம்மை ஆழமாக, அதிகமாக சிந்திக்கத் தூண்டுகிறது. நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கு இடையே உள்ள இடைவெளியை தெளிவாக நிரப்புகிறது. வருங்காலத் தை கணிக்கும் கடின வேலையை விட வருங்காலத்திற்கே சென்று கடந்து வந்த காலம் எப்படி இருந்திருக்கும் என்று கணிக்கும் பணி எளிமையானது மட்டுமல்ல, வலிமையானதும் கூட! தத்துவார்த்த அறிவுரை ஒன்றை கேள்விப்பட்டிருப்பீர்கள். நீங்கள் இறந்த பின் உங்கள் கல்லறையில் என்ன எழுதப்பட்டிருக்கும், சுற்றியுள்ளவர்கள் உங்களைப் பற்றி என்ன கூறுவார்கள் என்று நினைக்கிறீர்கள் என்று எப்பொழுதும் நினைத்து வாழ்ந்தால் வாழ்க்கை பயனுள்ளதாக இருக் கும். உங்கள் வாழ்க்கையும் பிறருக்கு பயனுள்ளதாக அமையும்என்பார்கள்.

வாழ்க்கையின் முடிவில் உங்கள் கல்லறையில் எழுதப்பட விரும்பும் வாக்கியம் போல் வாழ ஆசைப்பட்டாலும் சரி, வியாபாரத்தில் தெளிவாக திட்டமிட்டு சரியாக செயல்பட்டு வெற்றி பெற விரும்பினாலும் சரி, நீங்கள் செய்யவேண்டிய காரியம் ப்ரீமோர்ட்டம்! தான்.

# முதலாம் அரையாண்டில் செலான் குழுமம் 32% வளர்ச்சி

செலான் வங்கி மற்றும் அதனது குழுமம் ஆகியவை, 2017 ஜுன் 30-ம் திகதி முடிவடைந்த 6 மாதங்களில் சிறப்பான நிதிப் பெறுபேறுகளை பெற்றுக் கொண்டதன் மூலம் உறுதிமிக்க வளர்ச்சி வேகம் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளது. இக் காலப்பகுதியில் செலான் குழுமம், வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக ரூ. 2,310 மில்லியனை பதிவு செய்திருக்கின்றது. கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 32% அதிகரிப்பாகும்.

செலான் வங்கியானது வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 1,805 மில்லியனைப் பெற்றுக் கொண்ட நிலையில் 2017 ஜுன் 30-ம் திகதியன்று இவ்வருடத்தின் முதல் 6 மாதங்களை நிறைவு செய்திருக்கின்றது. 2016-ம் ஆண்டின் முதல் அரையாண்டில் வங்கி பதிவுசெய்த ரூபா 1,755 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 2.87% அதிகரிப்பாக காணப்படுகின்றது. சவாலான வியாபாரச் சூழல் மற்றும் NPA மீது மேற்கொள்ளப்பட்ட விவேகமான பெறுமதிக் குறைப்பு ஏற்பாடுகள் என்பவற்றுக்கு மத்தியிலும் செலான் வங்கி முதல் 6 மாதங் களில் ஒரு சிறப்பான வளர்ச்சியை பதிவு செய்திருக்கின்றது.

இழப்பீட்டுத் தீர்ப்பாயத்தில் இருந்தான நிலுவைத் தொகையை செலுத்துவதில் வங்கி அனுபவித்த தாமதநிலையின் காரணமாக NPA மீது பெறுமதிக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காவிடின், பாதுகாப்பளிக்கப்பட்ட கடன் வழங்குனர் என்ற வகையில் ஒரு நிறுவனத்தின் சொத்துக்களை கடனை கொடுத்துத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ள சூழலில் அதிலிருந்து மற்றுமொரு கொடுப்பனவு தொகை கிடைக்கப் பெறக்கூடியதாக இருப்பதை கருத்திற் கொள்ளும் போது, செலான் வங்கியானது ஆண்டுக்கு-ஆண்டு அடிப்படையில் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 21% இற்கும் அதிகமான இலாபத்தை அடையப்பெறும்எனலாம்.



ரூ. 6,147 மில்லியனாக காணப்பட்ட தேறிய வட்டி வருமானம், 2017 ஜுன் 30-ம் திகதி முடிவடைந்த 6 மாத காலப் பகுதியில் ரூ. 7,265 மில்லியனாக 18.19% இனால் அதிகரித்தது. முற்பணங்கள் மீதான தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் செயற்திறனான விலையிடல் மூலோபாயம் ஆகியவற்றின் விளைபயனாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் 53.26% அளவுக்கு வட்டிச் செலவுகள் மிக விரைவாக அதிகரித்து, அதன் மூலம் இலாப எல்லைகள் குறுகலடைந்தன. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 2017 இன் முதலாம் அரையாண்டில் கட்டண அடிப்படையிலான வருமான வகைகளைப் பொறுத்த வரையில், தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் 23.83% இனால் ரூபா 1,773 மில்லியனாக அதிகரித்தது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,567.43 | 6,492.69 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,784.51 | 3,724.21 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 1,800.501

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** லங்கா செரமிக் .(167.00), மடுல்சிமா(10.70), பலாங்கொட (21.60), உடபுசலாவ(36.00), எஸ்எம்பி லீசிங்(0.80).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.10), பிசி பார்மா(0.10), ஆதாம் கப்பிரல்(0.80), ஆதாம் இன்வெஸ்மன்ட்(0.40), புளூ டைமன்ஸ்(0.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 151.12 | 154.92 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 195.40 | 202.02 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 176.77 | 183.40 |
| சுவிஸ் பிராங் | 156.07 | 162.32 |
| கனேடிய டொலர் | 117.86 | 122.51 |
| அவுஸ்திரேலிய டொலர் | 117.52 | 122.75 |
| சிங்கப்பூர் டொலர் | 110.39 | 114.42 |
| ஜப்பான் யென் | 1.37 | 1.43 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.39 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.70 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தவளை இளவரசன்

(1208.2017 இன் தொடர்ச்சி)

காலையில் கண்விழித்த இளவரசி திடுக்கிட்டாள். தவளை இல்லை.ஆனால் தவளைக்குப் பதிலாக ஒரு அழகிய வாலிபன் படுத்திருந்தான். இளவரசியின்அதிர்ச்சிக்குக் காரணம் அந்த இளைஞன். அந்த வாலிபன் மிகுந்த அழகுள்ளவனாக இருந்தான்.

அவன் கண்களும் முகமும் எவரையும் கவரக் கூடியதவதாக இருந்தது.

இளவரசி பார்த்துக் கொண்டிருந்தபோதே, வாலிபனும் விழித்தெழுந்தான்.

இளவரசியாரே,"எனக்கு உதவியதற்கு மிக்க நன்றி,"என்றான்.

"நீங்கள் யார் நான் உங்களுக்கு என்ன உதவி செய்தேன்,"என்றாள்.

"இளவரசியாரே, நான்தான் தவளையாக இருந்தேன் ஒரு சூனியக்காரி என்னை தவளையாக்கிவிட்டாள். இளவரசி, ஒருத்தி அவள் தட்டில் உன்னைச் சாப்பிடச் செய்ய வேண்டும். மூன்று இரவுகள் அவளுடைய படுக்கையில் தூங்க வைக்க வேண்டும் அப்போதுதான் உன் சாபம் நீங்கி இளவரசனாவாய்,"என்றாள்.

தங்கப் பந்தை நீ தொலைத்துவிட்டு என் உதவியைக் கேட்டாய்

நான் உன் உதவியைக் கேட்டேன். உன்னால், நான் சூனியக்காரியின் சாபத்திலிருந்து மீண்டேன். அதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

நான் வல்லக்கோட்டை அரசனின் ஒரே மகன்! நீ, விரும்பினால் என் தந்தையிடம் அழைத்துச் செல்கிறேன். என் தந்தையின் அனுமதியுடன் நாம் திருமணம் செய்து கொள்வோம். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் இளவரசன்.

"நான் திருமணம் செய்யப்போவது தவளையை அல்ல? இளவரசனைத்தானே! அதனால் சம்மதிக்கிறேன்,"என்றாள் இளவரசி.

இளவரசி, தன் தந்தையிடம் அழைத்துச் சென்று வல்லக்கோட்டை இளவரசனை அறிமுகப்படுத்தினாள். அவருக்கும் இளவரசனைப் பிடித்திருந்தது.

எட்டுக் குதிரைகள் பூட்டிய இரதம் தயாராக நின்றது

அதன் சேணங்கள்



அனைத்தும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு குதிரையின் தலையிலும் ஒரு வெண்சிறகுகள் ஒயிலாக ஆடியது. அந்த இரதத்தில் இளவரசியும், இளவரசனும் வல்லக்கோட்டைக்குப் பயணமானார்கள்.

வல்லக்கோட்டை அரசரும் அரசியும் அரண்மனை வாயிலில் நின்று வரவேற்று அழைத்துச் சென்றனர். அதன் பின் இருவருக்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. அந்த நாட்டு மக்கள் உற்சாகமாக அந்தத் திருமணத்தைக் கொண்டாடினர்.

தவளை இளவரசனும் இளவரசியும் வெகு காலம் சந்தோசமாக வாழ்ந்தனர்.

இளவரசனின் தந்தையான அரசர் மறைவுக்குப் பின் தவளை இளவரசன் அந்த நாட்டுக்கு அரசர் ஆனார். வல்லக்கோட்டை நாட்டு மக்கள்

ஒரு குறையும் இல்லாமல் அவருடைய ஆட்சியில் வாழ்ந்தனர்.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1248 - உலக பாரம்பரியக் களங்களில் ஒன்றான ஜெர்மனியின் கொலோன் கதீட்ரல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இது 1880 இலேயே கட்டி முடிக்கப்பட்டது.
- 1900 -ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்கக் கூட்டுப் படைகள் பெய்ஜிங் நகரை ஆக்கிரமித்தன.
- 1908 - முதலாவது அழகுப் போட்டி இங்கிலாந்தின் போக்ஸ்டன் நகரில் இடம்பெற்றன.
- 1912 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு அரசை அமைக்க அமெரிக்கக் கடற்படையினர் நிக்கராகுவாவை முற்றுகையிட்டனர்.
- 1921 - தன்னு துவா என்ற புதிய நாடு (தற்போதைய திவா) உருவாக்கப்பட்டது.
- 1937 - ஆறு ஜப்பானிய விமானங்கள் சீனாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1945 - பசிபிக் போர் முடிவுற்றது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் விதிகளுக்கமைய ஜப்பான் சரணடைந்தது.
- 1947 - பிரித்தானிய இந்தியாவில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தான் விடுதலை அடைந்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்தது.
- 1969 - வட அயர்லாந்துக்கு ஐக்கிய இராச்சிய இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.
- 1972 - கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த விமானம் கிழக்கு பேர்லின் விமான நிலையத்திலிருந்து கிளம்பும்போது விபத்துக்குள்ளாகியதில் 156 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - போலந்தில் தொழிற்சங்கத் தலைவர் லெக் வலேசா தலைமையில் வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டது.
- 2006 - இஸ்ரேல் - லெபனான் போர் முடிவுக்கு வந்தது.
- 2006 - முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 61 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.
- 2007 - ஈராக்கில் கட்டானியா என்ற இடத்தில் இடம் பெற்ற நான்கு தொடர் குண்டுவெடிப்புகளில் 796 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1911 - வேதாத்திரி மகரிசி, இந்திய ஆன்மீகத் தலைவர் (இ. 2006)
- 1942 - அங்கையன் கைலாசநாதன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1976)
- 1958- சாந்தி சச்சிதானந்தம், இலங்கைத் தமிழ் சமூக ஆர்வலர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் (இ. 2015ஸஸ)

இறப்புகள்

- 1979-என். எம். பெரேரா, இலங்கையின் மாக்சிய வாதி, அரசியல்வாதி (பி. 1905)
- 1984 - காசாபா தாதாசாகேப் சாதவ், இந்திய மற்போர் வீரர் (பி. 1926)
- 2007-இராம. திரு. சம்பந்தம், தமிழக ஊடகவியலாளர்
- 2011 - சம்மி கபூர், இந்தியத் திரைப்பட நடிகர் (பி. 1931)

சிறப்பு நாள்

- பாக்கிஸ்தான் - விடுதலை நாள் (1947)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 40 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 95 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 300 | 300 | 250 |
| தக்காளி | 160 | 200 | 120 | 140 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 120 | 100 | 70 | 120 | 120 | 140 |
| கரட் | 100 | 200 | 140 | 140 | 200 | 180 |
| பூசணி | 50 | 100 | 40 | 60 | 60 | 70 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 100 | 140 | 150 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 140 | 120 | 140 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 140 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 50 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 80 | 100 | 160 |
| லீக்ஸ் | 100 | 140 | 70 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 140 | 100 | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 40 | 20 | 20 | 40 | 60 | 50 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 160 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 70 | 60 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 80 | 50 | 70 | 80 | 160 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 180 | 200 | 200 | 200 | — | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | 150 | 160 | 200 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 25 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | — | 50 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் தானே நம்பிக்கை இழப்பது இறைவனிடம் நம்பிக்கை இழப்பதாகும்.

– விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேசிய அரசாங்கம் ஒடுங்கிப்போக இருந்தவர்களும் தடக்குப்படுவர்

தேசிய அரசாங்கம் நீடிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பது உறுதியாயிற்று.

தேசிய அரசாங்கம் வீழ்ச்சியடையுமாக இருந்தால், அதன் முதல் இடி கூட்டமைப்பின் தலையில் என்பது தெரிந்த விடயம்.

அதேநேரம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவருகிறது. சமஷ்டி என்ற பெயர் இல்லாவிட்டாலும் சமஷ்டிக்குச் சமமான அதிகாரங்கள் தீர்வில் உள்ளன என்றெல்லாம் தமிழ் மக்களுக்குக் கூறியவர்கள் தலையில் துண்டை விரித்துக் கொண்டு போவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்ற நிலைமைக்கு விரைவில் வரப்போகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு இரண்டு ஆண்டுகள் காலஅவகாசத்தை நடைமுறையில் இருக்கும் நல்லாட்சி பெற்றுக் கொண்டது.

இந்த அவகாசத்தைக் கொடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் உடன்பட்டது.

ஆனால் இப்போது இருக்கக்கூடிய நிலைவரங்களைப் பார்க்கும் போது, தேசிய அரசாங்கம் கை அசைத்து விடைபெறும் அளவுக்கு வந்துவிட்டது.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் இருவருக்குமிடையில் பல விடயங்களில் உடன்பாடில்லை. கூடவே வேலைவாய்ப்புக்கள் அறவே வழங்கப்படவில்லை.

தவிர, நல்லாட்சியில் ஆர்ப்பாட்டங்களுக்கும் பேரணிகளுக்கும் குறைவில்லை என்ற நிலைமையே உள்ளது.

ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் நாளாந்தம் போராடத் தலைப்பட்டு விட்டன.

எரிபொருள் விநியோகம் தடைப்படும் அளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை முன்வைப்பதற்கு பௌத்த பீடங்கள் எதிர்க்கின்றன.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவில்லை என்று பலதரப்புக்களும் குற்றம் சாட்டுகின்றன.

ஆக, தேசிய அரசு நின்று நிலைப்பதற்கு முடியாத காரியமாயிற்று.

அரசாங்கம் என்றால் மேற்கூறிய விடயங்களுக்கு முகம் கொடுக்கவும் அவற்றுக்கு தீர்வு காணவும் வேண்டும் என்று யாரேனும் கருத்துரைத்தால் அது நியாயமானது.

ஆனால், நாட்டைக் கட்டியெழுப்பவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவுமென வெளிக்கிட்ட தேசிய அரசில் இப்போது கட்சி அரசியல் நடக்கத் தலைப்பட்டு விட்டது.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியை முன்னிலைப்படுத்துவதற்கு அக்கட்சி சார்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் முயற்சி செய்வது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தலையிடியைக் கொடுக்கிறது.

தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி தன்னை வளர்த்துக் கொள்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏமாந்து போகிறது என்பதான விமர்சனங்கள் நிதானமாக ஆட்சியை நடத்த வேண்டும் என நினைக்கும் ஜனாதிபதி மைத்திரியைக் குழப்பவே செய்கிறது.

ஆக, தேசிய அரசு பலம் இழப்பது உறுதியாகும் போது, தமிழ் மக்களுக்கு உறுதிமொழி வழங்கிய தமிழ் அரசியல் தலைவர்களும் தடக்கவேண்டி வரும் என்பது சர்வ நிச்சயம்.

# அரசை கவிழ்க்க முடியாது

## அமைச்சர் ரிஷாத் உறுதி

(கினிகத்தேனை)

பெரும்பான்மையான ஆசனங்கள் இருக்குமாயினும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாதென கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கினிகத்தேனை பிரதேசத்தில் வாழும் மக்கள் மத்தியில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் வகையில் நேற்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸவின் அழைப்பின் பேரில் வருகைதந்த கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட மக்களிடம் விசேட கலந்துரையாடல் ஒன்று கினிகத்தேனை கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின் இந்த நாட்டில் இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றமை பெருமை மிகு வரலாற்றிற்குரியது.

இந்த நல்லாட்சி அரசாங்கத்தினை இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களின் பாரிய அர்ப்பணிப்புடன் உருவாக்கப்பட்டது.

இரு கட்சிகளை சார்ந்த இரு தலைவர்கள் உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கத்தில் அடிமட்டத்திலுள்ள ஒரு சிலரின் கருத்து வேறுபாடு காரணமாக குழப்ப நிலைமைகள் உருவாக்கப்படுகின்றது.

புதிய அரசியல் அமைச்சின் ஊடாக அரசாங்கத்தை தொடர்ந்தும் கொண்டு செல்லக் கூடிய வாய்ப்புகள் உள்ளது.

நான்கரை வருடத்தில் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே தொடர்ந்தும் இந்த அரசாங்கத்தை வழி நடத்திச் செல்ல இரு தலைவர்களும் உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கம் உறுதியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ)

## வாகன விபத்து; இருவர் காயம்

காரைதீவில், பிரதேச செயலக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த விபத்து காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய சுற்றுவட்டத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலக வாகனம் சுற்றுவட்டத்தினால் காரைதீவிற்குள் செல்ல முற்படுகையில் கல்முனைப் பக்கமிருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் குறித்த வாகனத்துடன் மோதியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன், இருவரும் காரைதீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவர் கல்முனை அஸ்ரப் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## இந்தியர்கள் மூவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு விமானம் மூலம் தங்கத்தைக் கடத்திச் செல்ல முற்பட்ட இந்தியப் பிரஜைகள் மூவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 117 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தேகநபர்கள் 32, 43 மற்றும் 53 வயதுடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களை தண்டப்பணம் செலுத்திய பின்னர் விடுவிக்குமாறு பிரதி சுங்கப் பணிப்பாளர் உத்தரவிட்டதாக சுங்க திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (செ)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

ஆகாசராஜா அறநெறியில் இருந்து வழுவாத அரசனாக வாழ்ந்தான். நாட்டை நானில மக்களும் போற்றிப் புகழும் வகையில் ஆண்டான். தன் குடிமக்களை ஒரு தாயைப் போல நேசித்தான்.

அவனுக்கு ஒரு தாரம் வாய்த்தாள். அவள் பெயர் தரணி தேவி. அலமலர்ந்து பார்க்கவைக்கும் அழகு பெற்றவள். ஆச்சரியப்படவைக்கும் அறிவு பெற்றவள். கும்பிடத் தோன்றும் நற்குணங்கள் கொண்டவள்.

அரசனும் அரசியும் ஆட்சியிலும் சரி அந்தப்புரத்திலும் சரி இசைவாகவே இருந்து வந்தனர்.

இத்தனை நிறைகள் இருக்கும்போது குறை என்று சொல்ல ஒன்று இருக்கவேண்டும் அல்லவா?

அவர்கள் உச்சிமுகர்ந்து உவகை கொள்ள ஒரு குழந்தை இல்லாது போயிற்று. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பிரதிகூல ஷஷ்டாஷ்டகம் என்பது என்ன?**

திருமண பொருத்தத்தில் பெண் இராசிக்கு 6.8 இல் ஆண் இராசி வருவது ஷஷ்டாஷ்டகம் என்பர்.




| பெண் இராசி | ஆண் இராசி |
|---|---|
| ரிஷபம் | துலாம் |
| கடகம் | தனுசு |
| கன்னி | கும்பம் |
| விருச்சிகம் | மேஷம் |
| மகரம் | மிதுனம் |
| மீனம் | சிம்மம் |

(தொடரும்)

## ஆரோக்கியமற்ற உணவுகள் தவிர்ப்போம்!

மிக்சர், பகோடா, உள்ளி முறுக்கு, ஜம்போ பீனட்ஸ், சிப்ஸ்,நூடில்ஸ் போன்ற உணவு வகைகள், அதிக உப்பு மற்றும் அஜினமோட்டோ அதிகம் கொண்ட உணவுகளாகும். இவற்றை அடிக்கடி எடுத்துவரின் அஜீரணம், பிறசர், புற்றுநோய் போன்ற தொற்றாநோய்களை தோற்றுவிக்கும் காரணிகளாக அமைந்துவிடும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஓர் உலகம்



மனித இனம் வாழ்வதற்கு ஒரே உலகம் தான் இருக்கிறது. மனிதனுக்குத் தேவையான நீரை வழங்குவதற்குக் கடல் ஒன்று தான் உள்ளது. எல்லோரும் மூச்சு விடுவதற்குரிய காற்றும் ஒன்று தான் உண்டு. உயிர்கட்கு எல்லா வகையிலும் ஆதாரமாக இருக்கக்கூடிய சூரியனும் ஒன்று தான். இந்த நான்கில் ஒன்றையுமே மனிதன் செய்தது இல்லை.

மேலும், உலக விரிவான மனித சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் அறிவின் திறமையாலும், உடல் உறுப்புகளின் செயல் திறமையினாலும் உற்பத்தி செய்து கொடுக்கும் பொருட்களின் மூலம் மனிதகுலம் மொத்தமும் வாழ்ந்து வருகிறது. இவ்வாறே ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையும் அமைந்து உள்ளது.

மனிதன் பிறக்கிறான். சிறிது காலம் வாழ்கிறான். பின்னர் இறந்து விடுகிறான். வாழும் காலத்தில் குடல் ஜீரணிக்கக் கூடிய அளவுக்கு மேலாக உணவை உட்கொள்ள முடியாது. உடல் சுமக்கும் அளவுக்கு மேலாக உடைகளை அணியவும் முடியாது. நின்றால் ஒன்பதுக்கு ஒன்பது அங்குலம் பூமி. படுத்தால் ஒன்றரை அடிக்கு ஆறடி அளவு நிலம், உட்கார்ந்தால் மூன்றடிக்கு மூன்றடி தரை. இதற்கு மேல் எவராலும் அனுபவிக்கவும் முடியாது.

எவ்வளவுதான் ஒரு மனிதன் சம்பாதித்து இருப்பு வைத்திருந்தாலும், இறக்கும்போது அவற்றில் ஒரு துளியைக் கூட எடுத்துக் கொண்டு போகவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்திற்கான இறுதிக் கட்டத்திற்கு அணியை எடுத்துச் சென்றுள்ள யாழ். வீராங்கனை தர்ஜினி


இலங்கையின் முன்னணி வலைப்பந்து வீராங்கனை சிவலிங்கம் தர்ஜினி, தற்பொழுது விளையாடி வரும் அவுஸ்திரேலியாவின் City West Falcons அணி, உலகின் முன்னணித் தொடரான விக்டோரியா வலைப்பந்து லீக்கில் பூர்வாங்க இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. தர்ஜினி அரையிறுதியில் பெற்ற அதிக புள்ளிகளே அந்த அணி கிண்ணத்தை வெல்வதற்கான வாய்ப்பை நெருங்கியுள்ளமைக்கு முக்கிய காரணியாகும்.

ACU Sovereigns அணிக்கு எதிராக கடந்த புதன்கிழமை (09) நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தர்ஜினி புள்ளிகளை அள்ளியதால் City West Falcons அணி 59-52 என்ற புள்ளிகளால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் தனது திறமையை முழு அரங்கிற்கும் வெளிப்படுத்திய தர்ஜினி மாத்திரம் அணிக்காக 51 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியுடன் தர்ஜினியின் அணி பூர்வாங்க இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளது. அந்தச் சுற்றில் City West Falcons அணி தனது பூர்வாங்க இறுதியில் DC North East Blaze அணிக்கு எதிராக பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்ட தேசிய அணியின் நட்சத்திரமான தர்ஜினி ஆறுமாத ஒப்பந்தத்தின் படியே அவுஸ்திரேலியா சென்று விளையாடி வருகிறார்

ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் தர்ஜினி தனது சிறந்த சூட்டிங் மூலம் அணிக்காக மொத்தம் 737 கோல்களை பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது சம்பியன்ஷிப், முதலாம் பிரிவு மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட ஆகிய அனைத்து பிரிவுகளிலும் வீராங்கனை ஒருவர் பெற்ற அதிக புள்ளிகளாக இருந்தன.



யாழ்ப்பாணம் ஈவினையை பிறப்பிடமாகக் கொண்ட தர்ஜினி கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண வலைப்பந்து போட்டியில் சிறந்த சூட்டராகத் (Shooter) தேர்வானவராவார். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை தேசிய அணிக்கு விளையாடிய பெருமை தர்ஜினிக்கு உண்டு. (க)

# தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்த மகாஜனா வீரன் தனுஜன்

தெற்காசிய நாடுகளின் 15 வயது தேசிய உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனம் (SAFF) நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் பங்குபற்றும் இலங்கை 15 வயது தேசிய உதைபந்தாட்ட அணியில் யா/மகாஜனக் கல்லூரி வீரன் ரவிக்குமார் தனுஜன் இடம் பிடித்துள்ளார்.



இத்தொடர் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கடந்த மார்ச் மாதம் இலங்கையில் நடைபெற்ற ஜப்பான், பூட்டான், நேபாளம், மாலை தீவு ஆகிய நாடுகளின் 16 வயதிற்குட்பட்ட தேசிய அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியிலும் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# விக்டோரியா கழகத்தை வென்றது அரியாலை மத்திய வி.கழகம்



விக்ரோரியா கழகத்துடனான இருபது- 20 போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டு கழகம் 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

12.08.2017 அன்று இடம் பெற்ற போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் 20 ஓவர்களில் 9 விக்கெட்டு இழப்பிற்கு 163 ஓட்டங்கள் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நிரோசன் 52 ஓட்டங்கள் பெற்றார்.பந்து வீச்சில் பிரசாத் 2 விக்கெட்டினை கைப்பற்றினார்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோரியா விளையாட்டுக் கழகம் 7 விக்கெட் இழப்பிற்கு 121 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. துடுப்பாட்த்தில் ஜோர் 45 ஓட்டத்தினையும் பந்து வீச்சில் 2 விக்கெட்டினை கைப்பற்றினார். (க)

# V.T.மகாலிங்கம் பிறிமியர் லீக் ஜொலிஸ்ராரை வென்றது சென்றலைற்ஸ்

ஏ.வு. மகாலிங்கம் பிறிமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் சென்றலைற்ஸ் தனது முதலாவது போட்டியில் ஜெலிஸ்ரார் அணிக்கு எதிராக 8 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியினை பெற் றது.



நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பாடிய ஜொலிஸ்ரார் அணி 18 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அவ் அணிசார்பாக அதிக பட்சமாக மதுசன் 40 ஓட்டங் களையும் மணிவண்ணன் மற்றும் பிரசன்னா ஆகியோர் தலா 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைற்ஸ் அணிசார்பாக ஜெரிக் 03 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அலன்ராஜ் 03 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும். தர்ஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் மற்றும் கிருபா ஜேம்ஸ்மயூரன் ஆகியோர் தலா 1 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 128 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பாடிய சென்றலைற்ஸ் அணி 17.1 ஓவர்களில் 2 இலக்கினை மாத்திரம் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் மிக அபாரமாக ஆடிய ஜேம்ஸ் 5 நான்கு, 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் எடின் 2 நான்கு 2, ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்களையும் ஷெல்டன் 3 நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் அலன்ராஜ் 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மதுசன் மற்றும் வாமணன் ஆகியோர் தலா 01 இலக்கினைக் கைப்பற்றினர் . (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் சென். மேரிஸ் அரையிறுதிக்கு தகுதி





உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகத்தால் தொடர்ச்சியாக மூன்றாவது வருடம் நடத்தப்பட்டு வரும் வருடாந்த விளையாட்டு விழாவில் (11.08.2017) அன்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உதயசூரியன் வி.க மற்றும் சென்மேரிஸ் வி.க ஆகியன மோதின.

ஆரம்பம் முதலே சமபலத்துடன் நடைபெற்ற போட்டியில் இரு அணிசார்பிலும் எந்த விதமான கோல்களும் போடப்படாத காரணத்தினால் தண்ட உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிக்கனியை எட்டிப்பறித்தது. இதன் மூலமாக சென்மேரிஸ் அணியானது அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# உடுத்துறை பாரதி வி.கழகம் மென்பந்து போட்டி முடிவுகள்





உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் (12.08. 2017) அன்று நடைபெற்ற மென்பந்து சுற்றுப்போட்டியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இளம்பிறை அணியும் இரண்டாவது போட்டியில் உதயசூ ரியன் (வத்திராயன்) அணியும் மூன்றாவது போட்டியில் சக்திவேல் அணியும் முறையே றம்போ, வெள்ளிநிலா A, வெண்மதி அணிகளை வெற்றி கொண்டு அடுத்த சுற்றுப்போட்டிகளிற்கு தகுதி பெற்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியை...

கண்டிக்கு விஜயம் செய்த ரவி கருணாநாயக்க, அஸ்கிரிய பீட மகாநாயக்கரை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், ஊடகங்களே நியாயமற்ற குற்றச்சாட்டுக்களை தம் மீது முன்வைத்ததாகவும் அதற்கான பிரதிபலனை அவர்கள் அனுபவிப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ரவி கருணாநாயக்க, அரசாங்கத்தில் இருக்கும் எமக்கு இவ்வாறு செய்ய முடியுமாயின், 28 மாதங்களாக அவை தொடர்பில் அறிந்திருந்தும் அதனை வைத்திருந்தது காலம் தாழ்த்துகின்றமை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பலம் இல்லையா?

என்னை முன்னுதாரணமாக கொண்டு 48 மணித்தியாலங்களுக்குள் நடவடிக்கை எடுக்க முடியுமாயின் ஏனையவற்றையும் தயவு செய்து அதேபோன்று செய்யுங்கள். ஏனையவை தொடர்பில் நான் கதைக்க வரவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தின் திறனை தயவுசெய்து அவருக்கும் காண்பியுங்கள்.

இவ்வாறு சிலவேளைகளில் நியாயமற்ற குற்றச்சாட்டுக்கள் ஊடகங்கள் ஊடாக சித்திரிக்கப்படுகின்றன. ஆகவே இதற்கு காலத்திற்கு நேரம் கொடுத்து சரியான சூழல் வந்த பின்னர் யார், என்ன நடந்தது என்ற விடயம் தெரியவரும்.

ஒரு குற்றமும் இல்லை என்ற காரணத்தினாலேயே அனைத்தையும் நான் முன்வைக ன்றேன். கூறியவற்றை சரியாக சொல்வதற்கு ஊடகங்களுக்கு தார்மீக உரிமை உள்ளது. நாடாளுமன்றத்தில் நான் கூறும் வரை வேறு விதமாக நாம் செயற்படுவோம் என ஊடகங்கள் எண்ணியிருந்தன.

எம் மீது குற்றஞ்சாட்டியவர்கள் மீது ஏதாவது ஒருவகையில் அந்த அழுத்தங்கள் வந்து சேரும். நடந்ததை நடந்தவாறு கூறுவது சரியான விடயம் என நான் கருதுகின்றேன். சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட்ட விதத்தை எதிர்காலத்தில் நாம் முன்னோக்கி கொண்டு செல்வோம்.

ஆணைக்குழுவிற்கனெ நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகள் என்னை மிகவும் சிறப்பாக நடத்தினர். அவர்களை நான் மதிக்கின்றேன். அதில் நம்பிக்கை வைத்தே நான் ஆணைக்குழுவில் முன்னிலையாகினேன். அமைச்சு பதவியில் இருந்து நான் விலகியதைப் போன்று இலங்கை வரலாற்றில் ...ற்கு முன்னர் நடந்தது இல்லை.

ஆசியாவில் வேறு நாட்டில் இல்லாத ஒன்றையே நான் ஏற்படுத்தினேன். அதிகார கஞ்சதனத்தால் இதனை செய்யவில்லை என்பது இதன்மூலமே புலப்படுகின்றது. நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நல்லாட்சி அரசாங்கத்தை பாதுகாக்கவே நான் அவ்வாறு செய்தேன் என ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (செ)

## ஆளும் கட்சி...

உலகில் எங்குமே ஒரு அரசாங்கத்தின் அமைச்சருக்கு எதிராக அதே ஆளுந்தரப்பில் இருந்து நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதில்லை.

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியில் சிறப்பாகவும், நேர்மையாகவும் செயற்பட்டதற்கான பரிசே இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையாகும்.

இதற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி விஜேதாச ராஜபக்ஷவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 52 பேரும் விஜேதாச ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.(செ)

## பிறந்த சிசுவை...

செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தையை பிரசவித்த பெண் நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதிக குருதிப் போக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து லிந்துலை வைத்தியசாலைக்கு சென்ற பெண் அங்கிருந்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மருத்துவ பரிசோதனையின் பின்னர் குறித்த பெண், குழந்தை பிரசவித்துள்ளதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, குறித்த பெண் பிரசவித்த சிசு, மரக்கறித் தோட்டத்தில் புதைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சிசுவை புதைப்பதற்கு உதவி புரிந்த பெண்ணொருவரையும், சிசுவை பிரசவித்த பெண்ணின் தாயும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிசு புதைக்கப்பட்டுள்ள பகுதியில் பொலிஸ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இன்று சிசுவின் சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். 23 வயதான பெண் ஒருவரே சிசுவை பிரசவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ)

## சாட்சியத்தின்...

2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி இரவு 10 மணியளவில் கொழும்பு-தெஹிவளையில் கடத்தப்பட்ட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும் கடற்படையினரால் கடத்தப்பட்டுள்ளனர் என்பது சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி இரவு 10 மணியளவில் மூன்று தமிழ் இளைஞர்களும் அவர்களது நண்பர்களான இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் பயணம் செய்த வாகனத்தோடு தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களில் மூன்று இளைஞர்கள் சார்பில் கடத்தப்பட்ட 17 வயதையுடைய மாணவன் ராஜீவ் நாகநாதன் சார்பில் அவரது தாயார் சரோஜா நாகநாதனும், பிரதீப் என்ற மாணவன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும், மாணவன் திலகேஸ்வரன் சார்பில் அவரது தாயார் காவேரி இராமலிங்கத்தையும் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தார்.

தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட வேளையில், சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணைகள் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விசாரணை முடிவில் எழுத்து மூலமான சமர்ப்பணங்கள் மனுதாரர்களின் சட்டத்தரணிகளான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி ஐ.சி.வலியமுன ஆகியோரால் நேற்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரர்களின் சட்டத்தரணிகள் தமது எழுத்துமூல சமர்ப்பணத்தில் ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் ஐந்து இளைஞர்களில் மாணவன் ராஜீவ் நாகநாதன், தாயார் சரோஜா நாகநாதன், கடத்தப்பட்ட பிரதீப் விஸ்வநாதன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும், மாணவனான திலகேஸ்வரன் இராமலிங்கம் சார்பில் அவரது தாயார் காவேரி இராமலிங்கமும் நீதிமன்றில் சாட்சியம் அளித்திருந்தனர்.

குற்றப்புலனாய்வு பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா, கடற்படையை சார்ந்த ஜோன் கொத்தலாவெல, அலுத்கெதர உபுல் பண்டார, அட்ரியன் சம்பத் ஆகியோர் மனுதாரர்களின் முக்கிய சாட்சியாளர்களாவர்.

இதற்கிணங்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் விசாரணை இடம்பெற்றது. இதன்போது கடத்தப்பட்ட மாணவனான ரஜீவ் நாகநாதனின் தாயார் சரோஜா நாகநாதன் சாட்சியமளிக்கையில்,

தனது ஒரே மகன் மருத்துவ கல்விக்காக 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி வெளிநாடு செல்ல இருந்ததாகவும், 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி இரவு தனது நண்பர்களுக்கு விருந்து கொடுப்பதற்காக நண்பர்கள் நால்வரையும் அழைத்துக் கொண்டு கொழும்பு நோக்கி செல்லுகையில், அவர்களை அவர்கள் பயணம் செய்த வாகனத்தோடு கடத்தப்பட்டு விட்டதாக தொலைபேசி அழைப்பு வந்தது. கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கொமாண்டர் சம்பத் முனசிங்கவும், ஹெட்டியாராச்சி உட்பட கடற்படையை சேர்ந்த நால்வரே தங்களைக் கடத்தி திருகோணமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைத்திருப்பதாக எனது மகன் தொலைபேசியில் தன்னிடம் தெரிவித்திருந்ததுடன், எனது மகன் 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையில் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டவண்ணமிருந்தார்.

தனது கணவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அண்ணாச்சி என்றழைக்கப்படும் சமந்த மற்றும் மொஹமட் அலி என்பவர்கள் கடற்படையினரே எனது மகனையும் மற்றைய நான்கு இளைஞர்களையும் கடத்தியுள்ளதாகவும் எனது மகனையும் மற்றைய இளைஞர்களையும் தங்களால் விடுவிக்க முடியும் என்றும் அதற்காக ஒரு கோடி ரூபா பணம் தருமாறும் கோரியதாக சாட்சியமளித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த டி சில்வா சாட்சியமளிக்கையில்,

தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்ட ஐந்து மாணவர்கள் உட்பட கொழும்பில் வைத்து 6 பேருமாக மொத்தம் 11 பேர் கடற்படையினரால் கடத்தப்பட்டு முதலில் சைத்திய வீதியிலும் பின்னர் திருகோணமலை கடற்படை சித்திரவதை முகாமில் அடைத்து வைத்ததுடன், மாணவர்களை விடுதலை செய்வதற்கு கப்பமாக ஒவ்வொருவரிடமும் ஒரு கோடி ரூபா கப்பம் கோரியுள்ளதாகவும், அதற்குச் சான்று காணப்படுவதாக தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

42 சாட்சியங்களை விசாரணைக்கு உட்படுத்தியதுடன் சைத்திய வீதியிலுள்ள தடுப்பு முகாமையும் திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை சித்திரவதை முகாமையும் தனது தலைமையில் விசாரணைக்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தியதில் வெளிவந்த சான்றுகளின் அடிப்படையிலேயே சாட்சியம் அளிப்பதாக சாட்சி நீதிமன்றில் தெரிவித்தார்.

ஐந்து மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவத்துடன் கடற்படையை சேரந்த லூதினன் கொமாண்டர்களான சுமித் ரண சிங்க, ஹெட்டிஆராச்சி, பிரசாத் சந்தன், சம்பத் முனசிங்க ஆகிய நால்வருக்கும் எதிராக சான்று உள்ளதென சாட்சியமளித்துள்ளார்.

கடற்படை முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தமையை முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவும், முன்னாள் கடற்படை பேச்சாளர் திசாநாயக்காவும் நன்கு அறிந்திருந்ததாகவும் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

தளபதி வசந்த கரன்னாகொட நினைத்திருந்தால் இந்த மாணவர்களை விடுதலை செய்திருக்கலாம் எனவும் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியினால் இந்த நீதிமன்றிற்கு பாரப்படுத்திய பகுப்பாய்வு அறிக்கையில் திருகோணமலையில் கடற்படையினரின் இரகசிய தடுப்பு முகாமில் கண்டெடுக்கப்பட்ட பெரும் தொகையான எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் காணப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கன்சைட் இரகசிய தடுப்பு முகாமும் மற்றும் முல்லைத்தீவில் கோத்தபாய இராணுவ வதை முகாமும் இயங்கியதாக சான்றுகள் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டது.

இவ்விரு வதை முகாம்களிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை அரச அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலம் முதன்முதலாக இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டது.

ஜோன் கொத்தலா வெலகுமாரவின் சாட்சியத்தின் மூலம் லெப்டினனட் கொமாண்டர் ரணசிங்க பெடிகே சுமித் ரணசிங்கவின் கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை இரகசிய தடுப்பு முகாமில் கடத்தப்பட்ட 5 இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அலுத் கெதர உபுல் பண்டாரவின் சாட்சியத்தில் ஐந்து இளைஞர்களும் கடத்தப்பட்டு கைது செய்யப்பட்டு திருகோணமலை இரகசிய தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் கொழும்பு கோட்டைக்கு அருகாமையில் சைத்திய வீதியில் அமைந்துள்ள 'பிட்டுபம்புவ' என்ற இடத்தில் லெப்டினன்ட்கேணல் ஹெட்டிஆராச்சி பிரசாத்தின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆட்கொணர்வு மனு விசாரணையில் மிக முக்கியமானதும் சட்டரீதியாக நிரூபிக்கப்பட வேண்டிய விடயங்கள் மனுதாரர்களது சாட்சியங்கள் மூலமும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளது சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட மாணவர்களை அரச கடற்படையினரே கடத்தியுள்ளதுடன், சித்திரவதை முகாமில் தடுத்தும் வைத்திருந்தனர் என்பவை மனுதாரர்களின் சாட்சியம் மட்டுமின்றி அரச அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே கடற்படையினரே மாணவர்களை கைது செய்துள்ளனர்.

மாணவர்கள் கடற்படையினரின் அதாவது அரச கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்தும் அரச கட்டுப்பாட்டில் உள்ளனர். எனவே அரசு இதற்கு பொறுப்புக்கூற கட்டுப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்க போதிய சான்றுகள் இந்த ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது என மனுதாரர்களின் சட்டத்தரணிகள் தமது எழுத்து மூல சமர்ப்பணத்தில் பதிவிட்டுள்ளனர்.

முதலாம் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜே.சி வலியமுனவும் 2ஆம், 3ஆம் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான அச்சலா செனவிரத்ன, தர்மராஜா ஆகியோரின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியிருந்தார்.(செ)

## கேப்பாப்புலவு...

ரூபாயை படையினருக்கு செலுத்துவதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன், நாளை செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் அது குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

காணி விடுவிப்பிற்காக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் கடந்த மாதம் 19ஆம் திகதி கேப்பாப்புலவிற்கு சென்றிருந்தபோது, மேற்படி உறுதிமொழி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## உமா ஓயா...

சுற்றாடல் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக குழு உறுப்பினரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜேர்மன், சுவிட்ஸர்லாந்து மற்றும் நோர்வே நாடுகளின் விசேட நிபுணர்களிடமிருந்தும் உமா ஓயா திட்டம் குறித்த அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, உமா ஓயா திட்டம் காரணமாக மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் நிலவும் பகுதிகளில் இருந்து 50 இற்கும் அதிகமான குடும்பங்கள் அகற்றப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அபாயம் நிலவும் சில பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (செ)

## நல்லைக்குமரன்...

க்கான யாழ்.விருது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது.

சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் வெள்ளி விழா மலர் நல்லூர் ஆலயத்தில் இருந்து மங்கல வாத்தியம் சகிதம் ஊர்வலமாக நாவலர் கலாசார மண்டபத்திற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வு காலை 08.00மணிக்கு இடம்பெறும். நல்லைக்குமரன் 25ஆவது மலரின் ஆய்வு உரையை யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் நிகழ்த்துவார்.(செ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மீன் வாடிக்குள்...



அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பேசாலை 4ஆம் வட்டாரம் கடற்கரை பகுதியில் உள்ள மீனவர் ஒருவரின் வாடி ஒன்றினுள் இனம் தெரியாத பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலினை தொடர்ந்து பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர், குறித்த சம்பவம் தொடர்பாக, பொலிஸார் கடந்த 8ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றதற்கமைய, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில், குறித்த பகுதியில், மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலில் குறித்த மீன் வாடி முழுமையாக அகற்றப்பட்ட நிலையில், மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில், பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

எனினும், குறித்த அகழ்வின் போது ஒரு சில உலோகப்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்ட போதும், எவ்விதமான மர்மப்பொருட்களும் கண்டு பிடிக்கப்படாத நிலையில் அகழ்வுப்பணிகள் நிறுத்தப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## ஜனாதிபதியிடம்...

பெற்ற கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விஜயதாச ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவர்.

முன்பு இருந்த கோப் குழுவில் விஜயதாச ராஜபக்ஷ தலைவராக இருந்த போது நானும் அதன் உறுப்பினராக இருந்தேன். அவர் திருடன் கிடையாது.

நேர்பட பேசும் மனிதர். நாங்களும் அவரும் இணைந்து கோப் குழுவில் திருடர்கள், மோசடியாளர்கள் குறித்து கண்டறிந்தோம். இதன் காரணமாக விஜயதாச ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இருந்து வெளியேற நேரிட்டது.

அவர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில், தற்போது வருமாறு அழைக்கும் கூட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

விஜயதாச ராஜபக்ஷ கட்சி மாறிய பின்னர், மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில், அவருக்காக நான் மாத்திரமே குரல் கொடுத்தேன்.

விஜயதாச ராஜபக்ஷவை விமர்சித்தவர்களே அவரை வருமாறு கூறியதை கேட்ட போது எனக்கு நகைப்புத்தான் வந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அவரை விரட்டுமாயின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வருமாறும் நான் அவரைக் கோருகின்றேன் என டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (செ)

## மகிந்தவுடன் இணை...

மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, எமது நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் சம உரிமை கொண்ட ஒரே மக்களாவர். இந்த நாடு என்றும் பிளவுபடக் கூடாது. எமது பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும்.

எனவே அதனைப் புரிந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதியும் நானும் இணைந்து ஆட்சி புரிய வேண்டும் என்று விரும்புகின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## புதிய வெளிவிவ...

கம் உண்டு எனவும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொண்டு நேற்றைய தினம் நாடு திரும்பிய வசந்த சேனாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை 15 ஆம் திகதியே வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளரும் தனது பணிகளை பொறுப்பேற்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

திறைசேரி பிணைமுறி விவகாரம் காரணமாக வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த ரவி கருணாநாயக்க அண்மையில் தனது பதவியை துறந்தார்.

அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை கொண்டு வருவதற்கு கூட்டு எதிர்க் கட்சி முயற்சி மேற்கொண்டது. இதனையடுத்தே அவர் தனது பதவியை துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## 24 மணி நேர...

சேவையொன்றை, பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதன்பிரகாரம், போதைப் பொருள் தொடர்பாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட எந்தவொரு குற்றச்செயலாக இருந்தாலும், 011 2580518, 011 2058552 அல்லது 011 2081040 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தித் தெரிவிக்க முடியும் என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 011 2081044 அல்லது 011 2588499 என்ற தொலைநகல் இலக்கம் மூலமும் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (செ)

## மின்சார ரயில்...

த்துள்ளார்.

பாணந்துறை, பொல்ஹாவலை, கோட்டை, நீர்கொழும்பு, களனிவெளி பகுதிகளில் 158 கிலோ மீற்றர்களை கொண்ட புகையிரதப் பாதைகளில் இந்த மின்சார புகையிரத சேவைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தற்போது இதற்கான கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க ஜப்பான், தென் கொரியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஸ்பெயின், சீனா ஆகிய ஆறு நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த திட்டத்திற்காக 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளதுடன் 3 வருடத்தில் இத் திட்டத்தை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (செ)

## வேறு அரசாங்கம்...

கின்றன. அந்த தவறுகளை திருத்திக் கொள்ளுமாறு மக்களுடன் இணைந்து அழுத்தங்களை கொடுப்போம்.

அத்துடன் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதிகளை மீறிச் செல்ல இடமளிக்க போவதில்லை.

ஆகவே வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரி சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர பங்களிப்பு செய்த அனைத்து தரப்பினரும் இணைந்து விகாரமஹாதேவி பூங்காவில் நாளை 15 ஆம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளதாகவும் விக்கிரமபாகு கருணாரட்ன குறிப்பிட்டுள்ளார். (செ)

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்
■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571

அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9331)
CSE COLOMBO STOCK EXCHANGE

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(102)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்களை வெல்லும் வாய்ப்பு
UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

புதிய முகவரியில்
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
5% - 50% வரை தள்ளுபடி
மாபெரும் மலிவு விற்பனை
14.08.2017 முதல் 26.08.2017 வரை
இல. 273, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3490
077 384 7842
(சி-9325)

PSP Rent a Car Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
+ Prius hybrid - CAT
+ Premio - CAB
+ Premio - KF
+ Axio - KM
+ Axio - KL
+ Axio - KI
+ Nissan 16 - KD
+ Nissan 15 - KD
+ Alto - KI
+ Indica - KI
+ Dawoo -18
(126)
தொடர்பு: 0773777502

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org